விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 01 ஞாயிற்றுக்கிழமை (18.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இனப்பிரச்சினையை தீர்க்காவிட்டால் இலங்கையின் வாழ்நாள் குறைந்து விடும்

## மனித உரிமை அமைப்புக்கள் எச்சரிக்கை

(நியூயோர்க்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப் படாவிட்டால் இலங்கையின் வாழ்நாள் குறைந்து விடும். இவ்வாறு அமெரிக்காவிலுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையும், மனித உரிமைகள் கண்காணிப் பகமும் கூறியுள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பீரிஸ் ஜெனிவா சென்றார்



(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் பங்கேற்க வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று அவசரமாக ஜெனிவா புறப்பட்டுச் சென்றுள்ளார். இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்க ஜெனிவா சென்றிருந்த அரசின் உயர்மட்டக் குழு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பியுள்ள நிலையிலேயே ஜீ.எல்.பீரிஸ் ஜெனிவா சென்றுள்ளார்.

ஜெனிவா மாநாட்டுக்காக அரச அமைச்சர்கள் மகிந்த சமரசிங்க, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நிமால் சிறிபால டி.சில்வா, அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் நாடாளுமன்ற (19ஆம் பக்கம் பார்க்க)

## அரசு-கூட்டமைப்பு பேச்சு அமெரிக்கா காரணம் அல்ல

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கும் இடையில் பேச்சுக்களை மீளத் தொடங்கு வதற்கு அமெரிக்காவின் தலையீடே காரணம் என்ற கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் நிராகரித்துள் ளார்.

இருதரப்பும் பேச்சு மேசைக்குத் திரும்ப அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செய லாளர் பிளேக்கின் அழுத்தங்களே காரணம் என்று கூறப்படுவது குறித்து அவரிடம் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று கேள்வி எழுப்பிய போதே, அமெரிக்காவின் தலையீடு எதுவும் இருக்கவில்லை என்று சம்பந்தன் கூறி யுள்ளதுடன் அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தை களின் (19ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப்போர் 21-ம் நூற்றாண்டின் படுகொலை நிறைந்த இரகசியப்போர்

### சிட்னி த மோனிங் ஹெரல்ட் விபரிப்பு

(கொழும்பு)

வன்னியில் இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இறுதிப் போர், 21 ஆம் நூற்றாண்டின் படுகொலை நிறைந்த இரக சியப் போராகும். இந்த கருத்தை சிட்னி த மோனிங் ஹெரல்ட் செய்திதாளில் அன்ரனி லியோன்ஸ்ரெயின் என்ற செய்தியாளர் குறிப் பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு வின் அறிக்கையின்படி இறுதிப் போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகளினால் கேட யங்களாக வைக்கப்பட்ட பொது மக்கள் மீது இலங்கை இராணுவத்தினர் தாக்குதல்களை நடத்தியதாக செய்தியாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில் செய்தியாளர்கள் மற் றும் மனிதாபிமான பணியாளர்கள், சுதந்திர மான பார்வையாளர்கள் எவரும் பிரவேசிக் காத நிலையில் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவை அமெ. அனுமதிக்கக் கூடாது

(கொழும்பு)

போர்க்குற்றங்கள்,மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனப் படுகொலை புரிந்த இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு வருவதை அனுமதிக்கக் கூடாது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஐக்கிய (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசைக் காப்பாற்றவே கூட்டமைப்பு பேச்சுக்கு இணங்கியது



### த.தே.மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரிலிருந்து இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றும் நோக்குடன் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்ததாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் நேற்று அவர்களது அலுவலகத்தில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பின் போதே மேற் படி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்த சந்திப்பில் அக்கட்சி யின் உபதலைவரும் (19ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு நகரில் நவீன சொகுசு மாடி மனைகளை நிர்மாணித்த நாம் இப்போது யாழ். மண்ணிலும்...
★ உங்கள் காணியில்
★ உங்கள் கனவு மனையை
★ நவீன வடிவமைப்பில்
★ குறைந்த செலவில்
நனவு மனையாக்க...
Call 0773629799
Metro Engineering (pvt) Ltd
www.metrohomes.lk

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...
சிங்கர் எயார்கண்டிஷனர்கள்
• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு

SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்
யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வர்த்தகப் பெருமக்களே...

**வியாபாரத்தைப் பதிவு செய்தல்**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-03
0729994777
0117902938

## பணியாளர் தேவை

கரவெட்டி பிரதேசத்தில் வசிக்கும் அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணி புரியக்கூடிய பெண் பணியாளர் தேவை. விருப்பமுள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.இல: 0776341216

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, சங்கரத்தையில் 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு :
0771950682 (6170)

## தவறிவிட்டது

14/1, பி.ஏ.தம்பிலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த விந்துஷா உதயன் என்பவரது தேசிய அடையாள அட்டை (896832395V) 15.09.2011 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். (6164)

## வீடு வாடகைக்கு தேவை

இணுவில், உடுவில், கே.கே.எஸ். வீதியை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு
077 9672585 (சி- 4468)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி அம்பனை வீதியில் இருந்து இரண்டாவதாக உள்ள 2 3/4 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0114949234 (6137)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி அம்பனை வீதியில் இருந்து இரண்டாவதாக உள்ள 2 1/2 பரப்புக் விஸ்தீரணம் உள்ள காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0114949234 (6137)

## காணி/வீடு விற்பனைக்கு

- பளை, புலோப்பளையில் 5 பரப்பு வெற்றுக் காணியும்,
- பளை, கச்சார் வெளி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6 ஏக்கர் காணியும்,
- 56, அச்சுக் கூட லேன், கொக்குவில் கிழக்கில் 6 அறை, 2 மலசலகூட வசதி, சுற்றுமதில் கொண்ட மேல் மாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:
0779592051 (6147)

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், தனியார் அலுவலர்களுக்கான

சனி, ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் - 17.09.2011

பிரிவு 1 : காலை 8.00 - 10.00 பிரிவு 2 : காலை 10.00 - 12.00
பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 பிரிவு 4 : மாலை 4.00 - 6.00

ஆரம்ப வகுப்பு 17.09.2011 - மதியம் 12.30 - 2.00

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம், இணுவில்
## பாரதி - சித்தங்கேணி

ஆசிரியர்: எஸ். கோகுலன்

**அரசியல் விஞ்ஞானம்** (சி- 4477)

| 2012 | | 2013 | |
|---|---|---|---|
| அலகு - 12 | | அலகு - 4 | |
| ஒப்பீட்டு அரசியல் | | அரசாங்கம், யாப்பு மாதிரிகள் | |
| யாழ்ப்பாணம் (Sat, Sun) | 9 - 10 am | யாழ்ப்பாணம் (Sat, Sun) | 8 -9 am |
| | 10 - 11 am | | |
| இணுவில் (Sat, Sun) | 12 - 1 pm | இணுவில் (Sat, Sun) | 11 - 12 am |
| Tu | 4 - 5 pm | | |
| பாரதி (Sat, Sun) | 3 - 4 pm | பாரதி (Sat, Sun) | 2 -3 pm |
| Fri | 5 - 6 pm | | |

## ENGLISH The Easy Way at YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்களுக்கு : 077 3212711 (6169)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2011-5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். மானிப்பாய் சோதி வேம்படி மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



சித்தியடைந்தோர் விபரம்:-

| | |
|---|---|
| தி. மேனுஜன் | - 176 |
| து. துலக்ஷன் | - 169 |
| த. கோபிகன் | - 166 |
| தி. குயின்ஜிகா | - 162 |
| செ.அபினா | -162 |
| க. அபிராஜ் | - 159 |
| ரி. கோஷிகன் | - 159 |

வாழ்த்துவோர்: பமிலி சுப்பர் ஸ்பொட்
யாழ். வீதி, மானிப்பாய். (சி-4474)

பரிசுப் பொதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

## வேலை ஆட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் அழகுப்பொருள் விற்பனை நிலையத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. திருநெல்வேலிக்கு அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 6139692 (C-4470)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2011ஆம் ஆண்டு
5ம் தர புலமைப்
பரிசில் பரீட்சையில்
165 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்த

### சுரேஸ்நாதன் அனுஷன்

(யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலய மாணவன்)
அவர்களை மேலும் பல உயர்வுகளைப் பெற மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஸ்ரான்லி பாம் நிறுவனத்தினர்
517, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6167)

# ஐ.தே.க.வேட்பாளர் கட்சி தாவினார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகரசபை வேட்பாளர் மொஹமட் சரோஸ் அந்தக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார்.

அவர் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துள்ளார்.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாநகரசபை தலைமை வேட்பாளர் மிலிந்த மொறகொட மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் மசூர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். (ந-9)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லப்பா பாக்கியம்



புத்தூர் கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா பாக்கியம் நேற்று (17.09. 2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா, இலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பர், இலட்சுமி ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும் சற்குணபூபதி (இளைப்பாறிய கைப்பணி போதனாசிரியை), பத்மாவதி (இளைப்பாறிய கைப்பணி போதனாசிரியை), துரைசிங்கம் (நிலஅளவை அத்தியட்சகர், முல்லைத்தீவு), தனபாலசிங்கம்(நிலஅளவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம்), சிவபாதசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வைத்தீஸ்வரன், கனகரத்தினம், சகுந்தலாதேவி, பாமினி (ஆசிரியை, நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), ரதிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரஞ்சனி (இலங்கை வங்கி,அச்சுவேலி), சண்முகப்பிரியா, மகிஜா (விவசாயப்பீட மாணவி, யாழ் பல்கலைக்கழகம்), வேணுஜா (பொறியியல் பீடம், பேராதனை), ஆரண்யா, திவிஜா, சஞ்சிதன், சாருஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.09.2011(இன்று) பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புத்தூர் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்மார்
துரைசிங்கம்
தனபாலசிங்கம்

(6172)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை



பிரபல கம்பனி ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது. தகுதி க.பொ.த. (உயர்தரம்) சித்தியும், தமிழ், சிங்களம் சரளமாக பேசக் கூடியவராக இருக்கவேண்டும். சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் மிக்கவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 021 4925849,
0773535561 (சி-4476)

## 'சங்கீத சாதகன்' பட்டம் வழங்கிக் கௌரவம்

தர்மபுரம், நெத்தலியாறு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேக குட முழுக்கு நிகழ்வுக்கு சர்வ சாதக ஆசிரியராக கடமையாற்றிய

**இரத்தின கணேஸ்வரன் ஐயா (பாலன் ஐயா)**

அவர்களுக்கு 'சங்கீத சாதகன்' என்னும் கௌரவ பட்டம், 16.09.2011 அன்று குருமார்கள், ஆலய பரிபாலன சபையினர், பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர், தர்மபுர குரும்பசிட்டி அம்பிகை அடியார்கள் முன்னிலையில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஆலய பரிபாலன சபையினர்
தர்மபுரம் நெத்தலியாறு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் (C-4475)

## ஆங்கில டிப்ளோமாவை பூர்த்தி செய்தவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் உயர் தேசிய ஆங்கில மற்றும் தேசிய ஆங்கில டிப்ளோமா கற்றை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான 3 வருட பட்டப்படிப்பிற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

எனவே இதற்கான மேலதிக விபரங்களை கடந்த 11 ஆம் திகதி வெளியாகிய சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் அல்லது யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவன த்தின் அறிவித்தல் பலகையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பார்வையிடுமாறு ஆங்கிலத்துறைத் தலைவர் கேட்டுக் கொள்கின்றார். (4-12)

## ஆசிரியர் தெரிவிற்கான எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தீவகம் கல்வி வலயத்தில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப்பரீட்சை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள முகாமைத்துவ மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் அழைப்புக்கடிதம் மற்றும் அடையாள அட்டையுடன் விண்ணப்பித்தவர்கள் சமுகமளிக்கும்படி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார். (4-12)

# நெல் கொள்வனவு திட்டத்திற்கு 500 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு

(கொழும்பு)

நெற் கொள்வனவு திட்டத்திற்காக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சுக்கு திறைசேரியினால் 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து 200 மில்லியன் ரூபாவை பொலனறுவை மாவட்ட செயலாளருக்கு மாவட்ட நெல் கொள்வனவிற்காக வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன குறிப்பிடுகிறார்.

பொலனறுவை மாவட்டத்தில் நெற் கொள்வனவில் ஈடுபடும் கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் 300 மில்லியன் ரூபா நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு ஒதுக்குவதாக அவர் மேலும் தெரிவிக்கிறார். நெற் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக மாத்திரம் விவசாயிகளிடமிருந்து 55 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகிறார். (4-2)

# புத்தகங்களை மட்டும் கற்பதால் ஆளுமை கொண்டவர்கள் உருவாவதில்லை

### பந்துலகுணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறை காரணமாக ஆளுமை குறைந்த மாணவர்கள் உருவாகுவதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு உரிய புத்தகங்களை மட்டும் கற்குமாறு பெற்றோர் நிர்ப்பந்திப்பதால் முழு ஆளுமை கொண்ட மாணவர்கள் உருவாவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது இந்நிலை மாற்றப்பட வேண்டுமென கற்றறிந்தோர் மத்தியில் விவாதங்கள் எழுந்துள்ளமை பாராட்டத்தக்கது.

நேற்றுக்காலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நேற்று நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் கலந்து கொண்டு அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

நேற்று' முதல் தினங்கள் வரை இப் புத்தகக் கண்காட்சி இடம்பெறும். 13 ஆவது தடவையாக இலங்கை புத்தக வெளியீட்டாளர் சங்கத்தினால் நடத்தப்படும் இக் கண்காட்சியில் 450 காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுமார் 40 வெளிநாட்டு புத்தக வெளியீட்டு நிறுவனங்களும் இம்முறை கலந்து கொள்கின்றன.

இதில் நுழைவுக் கட்டணமாக 10 ரூபா அறவிடப்படும்.

இன்றைய அங்குரார்ப்பணப் பண நிகழ்ச்சியில் இந்தியாவின் பற்றிக்சின் நிறுவனத்தின் தலைவர் எஸ்.கே.ஹூய் கலந்து கொண்டார். (4-12)

## 10 ஆம் ஆண்டு நிறைவு விழா

(வவுனியா)

வவுனியா தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா இன்று பாடசாலை அதிபர் செ.பவேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ப.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.பொன்னையா, துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக கிடாச்சூரி இராணுவ உயர் பொறுப்பதிகாரி கே.என்.டி.கர்ணபாலவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (4-12)

# இராசி பலன்

18.09.2011

(புரட்டாதி 01, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 06.00 மணிக்கு

சஷ்டி பின்னிரவு 1.52 மணிவரை

கார்த்திகை முன்னிரவு 7.47 மணிவரை

இராகுகாலம் 4.33-6.03 மணிவரை

சுபநேரம் 9.03-10.33 மணிவரை

கார்த்திகை விரதம்,

கபில சஷ்டி.

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள நினைப்பீர்கள், மனக் குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர்.

**இடபம்** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், நண்பர்கள் உதவி செய்வர்.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை,காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும்,கந்தன் வழிபாடு அமைதி தரும்,சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரும்,பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றி பெறும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**சிங்கம்** தொட்ட காரியம் துளிர்விடும் நாள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு,கௌரவமான நாள்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு பெருகும் நாள்,தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தந்தை வழியில் தனவரவு ஏற்படலாம்,திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**துலாம்** வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது,கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும்.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், போசன சுகமுண்டு,களஸ்திர நன்மையுண்டு.

**தனுசு** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்ன ணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** பிள்ளைகளால் பெருமையான செய்திகள் வந்து சேரும் நாள்,மறைமுகப் போட்டிகள் மாறும்,கல்யாணக் கனவுகள் நனவாகலாம்,சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கும்பம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள்,பெற்றோர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும்.

**மீனம்** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள்,வரவு திருப்தி தரும்,குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், நீண்ட நாளைய பிரச்சினைகள் தீர்வுக்கு வரும்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## நடுத்தெரு மரியாதை!

“பெரியவரே! உங்களுக்கு எத்தனை வயது ஆகிவிட்டது?”என்று சிறுவன் ஒருவன் கேட்டான்.

“எதற்கு கேட்கின்றாய் தம்பி... ஏதாவது பாராட்டு விழா நடத்துவதற்கா?”என்று கேட்டார்.

“அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள்!”

“இந்த நவம்பர் வந்தால் நாற்பத்தைந்து வயது!”

“எனக்கு வயது என்ன தெரியுமா? பதினைந்து!”என்றான்.

“அதற்கு என்ன இப்போது?”

“சற்று நடுத்தெருவுக்கு வருகிறீர்களா?”

“எதற்காக?”

“உங்களை நடுத்தெருவில் நிற்க வைத்து நான்கு அறை கொடுக்க வேண்டும்!

“தம்பி! என்னை மாதிரிப் பெரியவர்களிடம் உன்னை மாதிரி சிறுவன் இப்படி கதைக்கக் கூடாது! பிரெஞ்சு எழுத்தாளர் மதாம் தெழா(ன்)லீஸ் எழுதியிருக்கிறதை படித்திருக்கின்றாயா?”

“இல்லை!”

“அவர் ஒருநாள் வீதி வழியாக சென்று கொண்டிருந்தார்! அப்பொழுது சிறுவன் ஒருவன் அவனைவிட ஒரு பெரிய சிறுவனை அடித்துக் கொண்டிருந்தான்! பெரியவன் அதைத் தடுத்துக் கொண்டிருந்தானே தவிர, திருப்பி அடிக்கவில்லை! இவருக்கு ஆச்சரியமாய் இருந்தது! இந்தப் பெரிய சிறுவனிடம் சென்று யார் இவன்... இப்படி அடிக்கிறானே... உன்னுடைய தம்பியா என்று கேட்டார். இல்லை இவன் அடுத்த வீதி சிறுவன் என்று சொன்னான்.

“மிகவும் கெட்டவனாக இருப்பான் போல் இருக்கிறது... இவனை நீ ஏன் திருப்பி அடித்துத் துரத்தக் கூடாது என்று கேட்டிருக்கிறார்... இவன் என்னைவிடச் சிறியவனாக இருக்கிறான். அதனாலே இவனைத் திருப்பி அடிக்க எனக்கு மனம் வரவில்லை என்று அந்தப் பெரிய சிறுவன் கூறினான். எப்படிப்பட்ட பெருந்தன்மை அது!”என்றார் பெரியவர்.

“அந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம்... பேசாமல் நடுவீதிக்கு வந்து நான்கு அறையை வாங்கிக்கொள்ளுங்கள்...!”

“என்னப்பா இது... வேடிக்கையாக இருக்கிறது... இதே ஊரில் பிச்சையாக ஒருவரிடம் 500 ரூபா கடன் வாங்கி ஆறு வருடமாகத் திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறேன்... அவரே என்னை இப்படி அறைய வந்ததில்லை... நீ வந்திருக்கிறாய்! யார் நீ?”

“அந்தப் பிச்சையாவோட பிள்ளை!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 90 |
| தக்காளி | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 |
| கோவா | 30 | 40 |
| கரட் | 50 | 50 |
| பூசணி | 25 | 25 |
| புடோல் | 30 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 |
| கரணைக்கிழங்கு | -- | 100 |
| பயற்றங்காய் | 40 | 60 |
| லீக்ஸ் | 50 | 50 |
| பீற்றூட் | 15 | 15 |
| கறிமிளகாய் | 45 | 40 |
| முருங்கைக்காய் | 30 | 80 |
| போஞ்சி | -- | 100 |
| கத்தரி தம்புள்ள | 30 | 40 |
| கீரை - 1 பிடி | 6-8 | 20 |
| தேசிக்காய் | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |



யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் ஒன்றியத்தினரால் அரசறிவியல்துறை வளாகத்தை சுத்தமாக்கும் நோக்கிலான சிரமதானப் பணியும் மரநடுகை நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் ஆ.வே.மணிவாசகர் மரம் நடுவதையும் அரசறிவியல் சிறப்புக்கலை பயிலும் மாணவ, மாணவிகள் சிரமதானப் பணியில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம் .

முல்லை. மாவட்ட

## பதிவாளர் செயலகத்தில் மொழிபெயர்ப்பு செய்யலாம்

பதிவாளர் நாயகத்திணைக்களத்தினால் வழங்கப்படும் விவாகம் மற்றும் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை ஆங்கில மொழிபெயர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் மாவட்ட பதிவாளர் செயலகத்தினால் விண்ணப்பிக்க முடியும். இதற்காக ஒரு பிரதிக்கு முத்திரைக்கட்டணம் ரூபா 100 எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் மேற்படி மொழிபெயர்ப்புச் சான்றிதழ்களை பெறுவதற்காக மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்கள் இதன்மூலம் நீக்கப்பட்டுள்ளதாகவும் முல்லை. மாவட்ட மேலதிக மாவட்ட பதிவாளர் தெரிவித்துள்ளார். (4-12-15)

### ஜனாதிபதி தலைமையில்

## கொழும்பு நகரத்தின் அபிவிருத்தி தொடர்பில் நிபுணர்களுடன் ஆலோசனை

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு தொழில்சார் நிபுணர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படும்.

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் குறித்து தொழில்சார் நிபுணர்களுக்கு விளக்கமளிக்கும் திட்டமொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுமார் ஆயிரம் தொழில்சார் நிபுணர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கொழும்புநகர அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நகரமாக மாற்றுவது அரசாங்கத்தின் நோக்கமாகும். இதற்காக நடைமுறைப்படுத்தப்படும் 100 நாட்கள் வேலைத்திட்டம் மற்றும் கொள்கை விரிவாக்கம் குறி த்து பேராசிரியர் றொகான் சமரஜீவ விளக்கமளித்தார்.

மக்களுக்கு சிறந்த சூழலை ஏற்படுத்துவது, சுத்தமான நகரை உருவாக்குவது, வெள்ளம் போன்ற அனர்த்தங்களை கட்டுப்படுத்துவது, வாகன நெரிசலைக் குறைத்தல், இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்து தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், நகரை அலங்கரித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் ஹைகர் முஸ்தபா, அமைச்சர் சுசில் பிறேம்ஜெயந்த கொழும்பு நகர மேஜர் வேட்பாளர் மிலிந்த மொறகொட ஆகியோர் கலந்து கொண்டனர். (4-12)

## யுத்தக்குற்ற விசாரணைக்கு வலியுறுத்தி அவுஸ்திரேலியாவில் வட்டமேசை மாநாடு

(கொழும்பு)

இலங்கை மீது யுத்தக் குற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தும் வகையில் அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் வட்டமேசை மாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இம்மாநாடு நடைபெறவுள்ளதாக அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணையை வலியுறுத்துவதற்கு ஆதரவளிக்கும் நாடுகள் தொடர்பான விபரங்கள் மாநாட்டில் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் ஐ.நா. அமைப்பின் இலங்கைக்கான முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸ், சர்வதேச ஜூரிகள் சபையின் தலைவர் ஜோன் டோவ்ட் நியூ சௌத் வேல்சின் முன்னாள் சட்டமா அதிபர் உள்ளிட்ட பலர் பங்கேற்கவுள்ளனர். (ஸ்ரீ-4-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரமுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணிமுதல் 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்படுமென இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

இதில் இன்று இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப் பகுதி, உடுவில் ஒரு பகுதி, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-12)

### உடுப்பிட்டி பிரதேச மக்களுக்கு

## மயானம் அமைக்க கரவெட்டி பிரதேசசபை செயற்குழு தீர்மானம்

(கரவெட்டி)

உடுப்பிட்டி பிரதேச மக்கள் தகனக் கிரியை களுக்காக எதிர்நோக்கும் பெரும் சிரமத்தை இலகுபடுத்துவதற்காக கரவெட்டி பிரதேச சபை செயற்குழு தீர்மானித்துள்ளது.

இப்பிரதேச மக்கள் தமது தகனக் கிரியை களுக்காக சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தொண்டைமானாறுப் பகுதியிலேயேயுள்ள உடுப்பிட்டி கரம்பன் இந்து மயானத் திற்கே செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் போக்குவரத்துச் செய்வதில் காலதாமதங்களும் பெரும் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு இம் மயானத்தை உடுப்பிட்டிப் பிரதேசத்திலுள்ள ஒரு பகுதியில் அமைப்பதற்கு கரவெட்டி பிரதேச செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது. (2-24)

## ஐ.தே.க.விலிருந்து ஐந்து பேர் நீக்கம்

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட ஐவர் நீக்கப்பட்டுள்ளனர்.

கட்சிக்கு எதிராக செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் மஹ்ரூப் மற்றும் நான்கு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களே கட்சியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

மஹ்ரூப் அரசாங்கத்தில் இணைந்துள்ள நிலையில் ஏனைய நால்வரும் ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்தி குழுத்தலைவரான சஜித் பிரேமதாஸவுக்கு சார்பாக சுயேட்சையாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். (4-2)


# தாரிகை நுண்கலை வளாகம்

## புதிய பிரிவு பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

1. உடையமைத்தல்
2. கேக் ஐசிங்
3. ஃபேஷியல் (பேஷியல்கள், இமை சீர் செய்தல், சரும முடி அகற்றுதல்)
4. Hair Style
5. மணப்பெண் ஒப்பனை
6. Straightening, Perming

மேலும் எமது வழமையான பயிற்சிகளும் மேற்படி பிரிவுகளில் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்:- 19.09.2011 திங்கள் முதல்

**மணப்பெண் ஒப்பனை**

மணப்பெண்ணை முழுமையாக அலங்கரிக்கும் செயற்பாடு 19.09.2011 திங்கள் பி.ப. 1 மணிக்கு எமது நிலைய மண்டபத்தில் நடைபெறும். கலந்து கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்க.

11, பொன் கந்தையா வீதி,
நெல்லியடி ( M.M.V. வீதி)

(சி-4464)



A/L பரீட்சை எழுதிய மாணவர்கள்
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

DMI COMPUTER EDUCATION

75% OFF

Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Diplima in Video Production & Multimedia
Master Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் Spoken English பயிற்சிமையம்.
veta® Experts in English Training

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு V - 19/09/2011 9.30 am
பிரிவு VI - 24/09/2011 9.30 am

(சி/4469)

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243



# சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல்வாதம், நீரிழிவு ,சூதகவலி, சிறுநீரக அழற்சி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி இரத்தமுக்கம், நெஞ்சுக்குத்து, நரம்புத்தளர்ச்சி, உடற்பருமன், மெலிவு, சோரியாசிஸ், கிரந்தி, கரப்பன், கணை, குளோகோமா, இளநரை, பொடுகு போன்ற சகலவிதமான நோய்களுக்கும் பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை இம் மாதம் 25, 26,27 ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

சந்திப்பதற்கு தொலைபேசி:-
0777047371
0757390195
0771005971

Dr.கே.சிவானந்தன்
ஆனந்தா வைத்திய நிலையம்
(காவல்துறை முன்பாக)
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

(சி-4471)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2011- 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற எனது அன்புக்கினிய செல்வங்களான

*ற.நிதூஷிகா-192 (மாவட்ட மட்டம் 1) (ஜோண் பொஸ்கோ)*
*ப.அபிராம் -186 (ஜோண் பொஸ்கோ)*
*சி.திவாகரன் -172 (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)*
*நி.நிவேதன் - 167 (ஜோண் பொஸ்கோ)*
*சு.பிருந்தாபன்-161 (ஜோண் பொஸ்கோ)*
*க.ஹம்சிகா-142 (ஜோண் பொஸ்கோ)*

ஆகியோர் கல்வியில் மேன்மேலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சிறந்த கல்விமான்களாக வரவேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:- ஷண் பாடசாலை சேவை
வலம்புரி றேட் சென்ரர், நவாலி

(சி-4463)


ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
மீண்டும் காப்புறுதியின்
பெரிய
போனஸ்
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
ஆயுள் காப்புறுதியாளர்களுக்கு
ரூ. 340 கோடி
தி.எம். தில்ஷான்
இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர்
"ஆயுள் காப்பீடு என்பது முழு எதிர்காலத்திற்குமான முதலீடாகும். நிறுவனத்தின் மூலதன ஸ்தீரதன்மை காரணமாகவே நான் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸினை தெரிவு செய்தேன். இதனை சர்வதேச தரக் கட்டுப்பாடுகளும் உறுதி செய்துள்ளன"
TRIAD 24170
AAA
RAM
AA

# தகவல் தொழில்நுட்பம், மல்டிமீடியா மற்றும் ஆங்கிலப் பயிற்சிக்கான புலமைப்பரிசில்

இக்கால இளைஞர். யுவதிகள் உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பதாலும் சுயதொழில் வாய்ப்புக்களைத் தேடி நிற்பதாலும் அவற்றிக்குப் பலம் சேர்க்கும் வகையில் எமது பாடநெறிகள் அமைந்துள்ளது சிறப்பம்சமாகும்.

ஏசியன் கல்விநிலையம் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். அத்துடன் சிஎஸ்சி மற்றும் Softview நிறுவனங்கள் தனித்தனியாக சர்வதேச தரநிர்ணயங்களுக்கமைய ISO 9001:2008 சிறப்பு அங்கீகார சான்றிதழைப் பெற்றவை.

இவ்வகையில் ஒவ்வொரு ஆண்டும் இலங்கையைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் குறிப்பாக G.C.E சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளின் பின் Mega Scholarship எனும் கணனிப்படிப்புக் களுக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தி சமூகத்தில் பொருளாதார ரீதியில் எந்த நிலையில் இருந்தாலும் கணனி கல்வியைத் தொடர இச்சிறப்பான வாய்ப்பை CSC-ASIAN கல்வி நிறுவகம் அளிக்கின்றது.

இவ்வாண்டு தகவல் தொழில்நுட்பம், கிராபிக்ஸ் அனிமேஸன் பயிற்சிகளோடு ஆங்கிலமொழி பேச்சுப் பயிற்சியையும் ஏசியன் அறிமுகப்படுத்துகின்றது. இது சாதாரண தர, உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வியை அல்லது தொழில் வாய்ப்புக்களைப் பெற ஒரு உந்துசக்தியாக திகழும் என்பதில் ஐயமில்லை.

## மெகா இலவசப் பரீட்சைகள்

ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே இவ் இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவ, மாணவியர் பங்குபற்றி முறையே 40%, 50%,60% மற்றும் 75% வரையிலான புலமைப்பரிசிலைப் பெறமுடியும்.

50 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும் இப்பரீட்சையை தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய விரும்பிய மொழிகளில் எழுதலாம். பொது அறிவு, நுண்ணறிவு மற்றும் பாடசாலைத் திட்டத்திற்கமைவாக 50 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

இப்பரீட்சையை எழுதுவதற்கான அடிப்படைத் தகைமை க.பொ.த. சாதாரண தரம் மட்டுமே. இப்புலமைப் பரிசில்களுக்கான பாடநெறிகள் அனைத்தும் CSC India,Softview India,Tally India, LCDL U.K மற்றும் Speak Easy India கல்வி நிலையங்களின் நேரடி அங்கீகாரம் பெற்றவை. இப்புலமைப்பரிசில் பெறும் மாணவர் ஒருவர் தனக்குரிய பாடநெறிக் கட்டணக்கழிவுடன் உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி தொழில்வாய்ப்பு மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும் கீழ்க்கண்ட பாடநெறிகளைத் தேவைக்கேற்ப தெரிவு செய்யலாம்.

அத்துடன் அனைத்துப் பாடப்பிரிவுகளும் Application, Programming, Web Development, Multimedia, English Language எனப் பிரதான ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## டிப்ளோமா பாடநெறிகள்

- Office Application Management
- IT & Web Programming
- Graphics Design & Animation
- 2D & 3D Animation & Maya
- Web Development &Animation
- Master Diploma in Graphic & Animation
- Auto CAD & Building Studies
- Access Programme
- Engilsh Language Programme
- Digital Pre-Press
- Digital Video Production
- Tally Accounting Programme
- Hardware & Networking
- Master Diploma in Multimedia
- Advanced Java Programming

விளம்பர விபரணம்

உதாரணமாக இப்பரீட்சையில் அதிகூடிய 75% புலமைப்பரிசில் பெறும் மாணவர் ஒருவர் 25% த்தை மட்டுமே தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு கட்டணமாக செலுத்த வேண்டும். பாடநெறிக்கான கட்டணம் 25% மாகக் குறைக்கப்பட்ட போதும் இலவச பாடநூல்களோ, பாட விதானங்களோ (Syllabus) கொடுக்கப்படும் பயிற்சி நேரங்களோ (Practicals) எவ்விதத்திலும் குறைக்கப்படுவதில்லை. ஏற்கனவே படித்து சான்றிதழ் பெற்ற பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவியரே அதற்கு சான்றாக உள்ளனர்.

அது மட்டுமல்லாமல் இம்முறை மெகா பரீட்சையில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் சேவை நோக்கத்தைக் கருதியும் "டீடீபி துறையில் வேலைவாய்ப்பு பெற மற்றும் உங்கள் சந்தேகங்களை நீக்கும்", "வழிகாட்டி டெலி கணக்கியல் மென்பொருள் குறித்த கேள்வி பதில் ", " A/L பின்னர் என்ன படிக் கலாம்" போன்ற கையேடுகளை இலவசமாக வழங்கவும் CSC-ASIAN முன்வந்துள்ளது.

## இலவச அனுமதிகள்

2011 இல் A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ICT கல்வியில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் இப்பரீட்சையில் பங்குபற்றலாம். இப்பரீட்சை இன்று 18-09-2011 (ஞாயற்றுக்கிழமை) நடைபெறும். இவ் இலவச பரீட்சைக்கான அனுமதிகளை யாழ்.நகர், நெல்லியடி, சாவகச்சேரி, வவுனியா, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மட்டக்குளி, நீர்கொழும்பு, மட்டக்களப்பு, பண்டாரவளை, மாத்தளை மற்றும் நுவரெலியா CSC-ASIAN கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வகையில் படித்தவர்களுக்கும் பொருளாதார வசதி படைத்தவர்களுக்கும் மட்டுமே கணனி கல்வி என்ற மாயையை புலமைப்பரிசில் திட்டத்தினூடாக உடைத்தெறிந்த பெருமை CSC-ASIAN யைச் சாரும். அத்துடன் புலமைப்பரிசில் மூலம் சேர்ந்து படிப்பது உங்கள் கல்விக்கான பெற்றோர்களின் செலவைக் குறைப்பதாகும். படிப்ளளளளளளளபின் முக்கியமான கட்டங்களில் சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்.


# புதிதாக ஆயுர்வேத வைத்தியாகளை இணைத்துக் கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

புதிதாக 226 ஆயுர்வேத வைத்தியர் களை சேர்த்துக் கொள்ள அரசாங்கம் நட வடிக்கை எடுத்துள்ளது.

இவர்களில் ஐவர் விரிவுரையாளர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என ஆயுர் வேத ஆணையாளர் நாயகம் பாலிய வீரக் கோன் தெரிவிக்கின்றார்.

இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் இதற்கான நேர்முக பரீட்சை களை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

ஆயுர்வேத வைத்தியர் ஆட்சேர்ப்பின் மூலம் சுதேச ஆயுர்வேத வைத்தியர்களுக் கான தட்டுப்பாடு ஓரளவு குறையும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். (4-2)

# திருகோணமலையில் எலும்புக்கூடுகள் மீட்பு

(கொழும்பு)

திருகோணமலையில் கல்லூரி வளவிற் குள் இருந்து மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி இந்த எலும்புக்கூடு மீட்பிரதிகப்பட்டது. பாடசாலைக்கான நீர்த் தாங்கி ஒன்றை அமைக்கும் பணிகளின் போதே இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நீதிவான் ஸ்தல விசா ரணையும் இடம்பெற்றுள்ளது. இதேவேளை சட்ட வைத்திய அதிகாரியின் கூற்றுப்படி இந்த எலும்புக்கூடு 15 வருடங்களுக்கு முந்தியது என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (4-9)

# செவ்விசை மாலை இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திர சிறியின் வழிகாட்டலில் வடமாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்களம் செவ்விசை மாலை என்ற இசை நிகழ்வை நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணி க்கு நல்லூர் கோவில் வீதி நடராஜா பரமே ஸ்வரி மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்பு பல்லைக்கழக தேர்ச்சி பெற்ற வாத்தியக் கலைஞர்களும் யாழ்ப்பாணத்துக் கலைஞர்களும் இணை ந்து ஹிந்துஸ்தானிய இசையுடன் கர்நாடக இசையையும் இணைத்து கச்சேரியை நிகழ்த்தவுள்ளனர்.

இதில் இசைத்துறை சார் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு வடமாகாண பண் பாட்டலுவல்கள் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி கேட்டுக் கொள்கின்றார். (2-12)

# ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நுளம்பு ஒழிப்பு வாரம்

## சுகாதார அமைச்சு தகவல்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரையிலான ஐந்து நாட்களுக்கு தேசிய நுளம்பு ஒழிப்பு தினங்க ளாக பிரகடனப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ள தாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதியில் இருந்து 9 ஆம் திகதி வரையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சுகாதார வாரத்தில் இந்த நுளம்பு ஒழிப்பு தினங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசேட சந்திப்பு ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது நுளம்பு ஒழிப்பு வாரம் ஒன்றை செயற்படுத்துமாறு சுகாதார அமைச்சர் சுகாதார அதிகாரிகளிடம் கோரி இருந்தார்.

இதற்காக பாதுகாப்பு அமைச்சின் முழுமை யான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள தீர் மானிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக ளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# வீதியை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

மாங்குளத்திலிருந்து மல்லாவிக்குச் செல் லும் பிரதான வீதியானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாதுள்ளமையால் போக்குவர த்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்கவேண்டியுள்ளது.

மேற்குறித்த வீதியூடாக வன்னி விளாங் குளத்திலிருந்து ஏ9 வீதிக்கு எடுத்துவரப்படும் கிரவல் மண்ணானது கனரக வாகனத்தின் மூலம் எடுத்து வரப்படுவதால் மேலும் இவ் வீதியானது சிதைவடைந்துள்ளது.

குன்றும் குழியுமாக காணப்படும் இவ் வீதியூடாகப் பயணிப்போர் விபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பருவகால மழைக்கு முன்னர் இவ் வீதியானது புனரமைத்துத் தரப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் மக்களின் பிரச் சினையைக் கருத்திற் கொண்டு இப்பிரதான வீதியை புனரமைத்து மக்கள் போக்கு வரத்திற்கு உதவுமாறு பயணிகள் கோரி க்கை விடுத்துள்ளனர். (4-3)



இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 67 ஆவது அலுவலக கிளை நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு உயர் நீதியரசர் நிசங்க உடலகம நாடாவை வெட்டி கட்டதத்தை திறந்து வைப்பதையும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீ நிதிநந்தசேகரம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

# யுத்தத்தின் போது இழப்புக்கள் ஏற்படுவதை தடுக்க முடியாது

## முத்தையா முரளிதரன் தெரிவிப்பு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சர்வதேச ரீதியான உதவிகள் அவசியமானது என இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற துயரமான அனுபவங்களை மீட்டிப்பார்ப்பதனை விடவும் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக செல்வந்த நாடுகள் இலங்கையின் வடக்குப் பிரதேசத்திற்கு உதவிகளை வழங்க முன்வரவேண்டுமென அவர் தெரிவித் துள்ளார்.

யுத்தம் தொடர்பில் பேசுவதில் அர்த்தமில்லை. கசப்பான அனுபவங்களை மீட்டிப் பார்ப்பதனால் எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் என்பது யுத்தமே. யுத்தத்தின் போது இழப்புக்கள் ஏற்படுவது வழமையானதே என அவர் தெரிவித்துள்ளார். ஈராக்கில் கூட்டுப்படையினர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்திருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். அதுவே யுத்தம். யுத்தத்தின் போது இழப்புக்கள் ஏற்படுவதனை தடுக்க முடியாது. அதே நிலைமையே இலங்கையிலும் ஏற்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். முத்தையா முரளீதரன் வடக்கில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளார்.

வடக்கில் பாரியளவில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் வெளிநாட்டு அரசாங்கங்கள் மட்டுமன்றி தனிப்பட்ட நபர்களின் உதவிகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் வடக்கு- கிழக்கு மக்களுக்கு உதவிகளை வழங்க வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (4-2)

## பளைக் கோட்டத்தில் நடைபெற்ற

# ஆரம்பப் பிரிவு விரைவு கணித போட்டி முடிவுகள் - 2011

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த பளைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடை பெற்ற ஆரம்பப்பிரிவு விரைவு கணித போட்டி கள் 2011 அண்மையில்இயக்கச்சி அ.த.க. பாடசாலை நடைபெற்றது.

இதில் வெற்றிபெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**தரம்-2**

லோ.வாசுகன் (கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை), லோ.துவாரகா (கிளி/பளை மத்திய கல்லூரி),கா.சுயானி (கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை)

**தரம்-3**

ஜெ.திவானுஜன் (கிளி/பளை மத்திய கல் லூரி),கே.கிசேரன் (கிளி/பளை மத்திய கல் லூரி),கு.காயத்திரி (கிளி/இயக்கச்சி அ.த. க.பாடசாலை)

**தரம்-4**

இ.சுதர்சனா (கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை),ஜீ.ஆரணி (கிளி/மாசார் அ.த.க. பாடசாலை),சு.ரேஜனன் (கிளி/பளை மத்திய கல்லூரி)

**தரம்-5**

க.அனுஷா (கிளி/பளை மத்திய கல்லூரி),இ.வினுஜா (கிளி/பளை மத்திய கல்லூரி),பா.மேனன் (கிளி/பளை மத்திய கல்லூரி).

(4-12-84)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் கந்தையா



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தையா கடந்த 14.09.2011 புதன் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-குண்டுமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா- மகிழம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிறிக்காந்தன் (பிரான்ஸ்), ஜெயக்காந்தன் (பிரான்ஸ்), ஜீவகாந்தன் (சிறி ஜெயந்தி நகை மாடம்), நிமல்காந்தன் (கந்தையா அன் பரமேஸ்வரி நகைமாடம்), துஷ்யந்தி (லண்டன்), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகசுதா, அனிற்றா ரஜனி, துஷ்யந்தி, றொபின்சன் (லண்டன்), அமலன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், பௌசிகன், பிரவின்சன் (லண்டன்) ஆகியோரின் பேரனும், ரேவதி (வவுனியா), சோதி (கொழும்பு), மஞ்சுளா (பிரான்ஸ்), துரை (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், கந்தையா (வவுனியா), கருணாகரன் (கொழும்பு), புலேந்திரராஜா (பிரான்ஸ்), அமரர் கங்கா (வவுனியா) மற்றும் மாணிக்கராஜா, மகேந்திரராஜா, சூரியகுமாரி, சுதாகரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 18.09.2011 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறி ஜெயந்தி நகை மாளிகை,
இல.74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 2222074

(6163)



# அரசாங்கம் வடக்கில் உட்கட்டமைப்பு வசதிகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது

## பசில், அவுஸ்.பிரதமரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் விழிப்புணர்வு நிகழ்வுகள் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கிளாடியின் விசேட தூதுவரான ஜோன் மெக்கற்றி சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. இதில் பசில் ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,

அரசாங்கம் வடக்கில் நடைமுறைப்படுத்தி வரும் கட்டமைப்பு வசதிகள் குறித்து விளக்கிக்கூறிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வீதி அமைப்பு, பாடசாலைகள், வைத்தியசாலைகள், ரயில் பாதையை வட பகுதிக்கு விஸ்தரித்தல், பலாலி விமான நிலையத்தின் இறங்குதுறையை புனரமைத்தல் போன்ற பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

ஏ-9 பாதையை விரிவுபடுத்தல், குடிநீர் வசதிகளை செய்து கொடுத்தல் போன்றவற்றை மேற்கொண்டு வரும் அரசாங்கம் இவ்வாண்டு இறுதிக்குள் யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீள் குடியேற்றிவிடும்.

அரசசார்பற்ற அமைப்புகளின் அனுசரணையுடன் வீட்டுச் சொந்தக்காரர்களைக் கொண்டே அவர்களின் வீடுகளை புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து கப்பல்மூலம் திரும்பிக் கொண்டிருக்கும் இலங்கை அகதிகளுக்கும் அரசாங்கம் வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறது.

இவ்விதம் நாட்டில் மீள்குடியேற்ற, புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அரசாங்கம் அரசியல் ரீதியில் நல்லிணக்கப்பாட்டை ஏற்படுத்தி வடக்கு-கிழக்கில் உள்ள மக்களை அரசியல் ரீதியில் வலுவூட்டும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்தி முதலில் ஜனநாயக ஆளுமையை இலங்கையில் வலுப்படுத்தி அதன் மூலம் சமூக வலையமைப்புத் திட்டங்களினால் மக்களின் வாழ்க்கையை குறிப்பாக விவசாயிகளுக்கு அரசாங்கம் நல்வாழ்வை பெற்றுக் கொடுத்து வருகின்றது என்றும் பசில் தெரிவித்தார் என்று அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (4-2)

## ஐ.நா.அறிக்கை விவாதிப்பை தடுக்க

# சட்ட மற்றும் நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன



## நிமால் சிறிபால டி சில்வா பெருமிதம்

(கொழும்பு)

மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக எவ்வித யோசனையும் கொண்டு வரப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 18 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்ள ஜெனீவா சென்றிருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் திரும்பினார். ஆணைக் குழுவின் முன் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாக கருத்துக்களை முன்வைத்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய மற்றும் நாடுகள் என்ற வகையில் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட 46 நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள தாம் உட்பட இலங்கை பிரதிநிதிகள் குழு நடவடிக்கை எடுத்ததாக கூறி அமைச்சர் ஐக்கிய நாடுகள் மனித செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுவதை தடுக்க தேவையான சட்ட மற்றும் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை எடுத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

தாருஸ்மான் தலைமையிலான நிபுணர்கள் அறிக்கையானது, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்க தயாரிக்கப்பட்ட அறிக்கையை சுட்டிக்காட்டிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியின்றி நிபுணர்கள் குழுவின் அறிக்கையை மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க சட்ட ரீதியாக அதிகாரம் இல்லை என தர்க்க ரீதியான கருத்துக்களை முன்வைத்து தெளிவுபடுத்தியதாக தெரிவித்துள்ளார். (4-2)

# முன்னாள் இராணுவ வீரருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

சிறைச்சாலை அதிகாரிகள் தமது கடமையை செய்வதை தடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ கப்டன் ஒருவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை பிரதான நீதிவான் லங்கா ஜயரட்ன நேற்று உத்தரவிட்டார்.

கடந்த ஜூலை 21 ஆம் திகதி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தனியார் வைத்தியசாலையொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது சிறைச்சாலை அதிகாரிகளின் கடமையை செய்யவிடாமல் தடுத்ததாக இச்சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இச்சந்தேக நபர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அடையாள அணிவகுப்பொன்று நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரினர். அடையாள அணிவகுப்புபொன்று நடந்தால் சந்தேக நபரை அடையாளம் காட்ட முடியும் என சாட்சிகள் கூறியுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (4-2)

# இலங்கையைச் சேர்ந்த நபருக்கு அமெரிக்காவில் 18 மாத சிறைவாசம்

அமெரிக்காவில் இலங்கை வம்சாவளிச் சிங்களவர் ஒருவருக்கு பதினெட்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தான் பணியாற்றிய நிறுவனத்தின் உள்ளகத் தகவல்களை பங்குச் சந்தை முதலீட்டாளர்களுக்குத் திருட்டுத்தனமாக வழங்கி அதற்குப் முப்பத்தைந்து இலட்சம் ரூபா இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த மன்ஹட்டன் பெடரல் நீதிமன்றம் மனோஷ கருணாதிலக்க எனும் பிரஸ்தாப சந்தேக நபருக்கு பதினெட்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. அவர் அங்குள்ள இலத்திரனியல் உற்பத்தி நிறுவனமொன்றில் கணக்காளராக் கடமையாற்றுகின்றார். (4-2)

## வடக்குக் கிழக்கில்

# தமிழ், சிங்களம் பேசக்கூடிய பொலிஸாரை இணைக்க தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பேசக்கூடிய ஆயிரம் இளைஞர்,யுவதிகளை இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட உள்ளன.

தமிழ், சிங்களம் ,முஸ்லிம் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர தமிழ் இளைஞர்கள் 50 உபபொலிஸ்பரிசோதகர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் பொலிஸில் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (4-2)

# பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஐ.நா.வின் சமாதானப் படையில்

இரண்டு வருடங்கள் பொலிஸ் ஊடகப் பேச்சாளராகப் பதவி வகித்த பிரசாந்த ஜயக்கொடி ஐ.நா. சமாதானப் படையில் பணியாற்றுவதற்காக வெளிநாடு செல்கிறார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராகப் பதவி வகித்த பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தனக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

எனது பணியை சரியாக நிறைவேறியுள்ளேன் என்று நம்புகின்றேன். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பணியை சிறப்பாக் மேற்கொள்ள உதவிய சகல ஊடக நிறுவனங்கள், பொலிஸ் மா அதிபர் அடங்கலான பொலிஸ் அதிகாரிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன்.

நாட்டுக்காக மேற்கொள்ள வேண்டிய சேவையை நிறைவேற்ற பின்னிற்க மாட்டேன் என்றார். (4-2)



இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக் கிளையில் வதியாதோர் வெளிநாட்டுக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டவர் இறந்ததன் காரணமாக அவரது இழப்பீட்டுத் தொகையான 5 இலட்சம் ரூபாவை அவரது மனைவியிடம் மேற்தரக்கிளையின் முகாமையாளர் மகாதேவா வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## முறையான சட்டங்களினால்

# துஷ்பிரயோகங்களை குறைக்கலாம்

(கொழும்பு)

சட்ட முறையாக அமுல்படுத்தப்படாததே சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக அமைத்துள்ளதென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னாள் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

சட்டம் எழுத்து மூலம் மாத்திரம் வரையறுக்கப்படக்கூடாதென சபையின் முன்னாள் தலைவரும் களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியருமான ஹரேந்தி சில்வா தெரிவிக்கிறார்.

இதேவேளை, சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளின் தாமதமும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு சாதகமாக மாறியுள்ளது என்று அதிகார சபையின் மற்றுமொரு முன்னாள் தலைவரும் கொழும்பு பல்கலைக்கழத்தின் சமூக விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜகத் வெல்லவத்த கூறினார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு பிணை வழங்காதிருக்கவும் மரணதண்டனை விதிப்பது தொடர்பிலும் யோசனைகளை விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளதாக சபையின் தற்போதைய தலைவரான சட்டத்தரணி அனோமா திசா நாயக்க கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும் துஷ்பிரயோங்களில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் கடுமையான நடவடிக்கைகள் குறித்து சிறுவர், மகளிர் மேம்பாட்டு அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிக்கையில், இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை விதிப்பதற்குரிய புதிய சட்டங்களைக் கொண்டுவர எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டுகிறார். (4-2)

# மற்றொரு கோணம்

## தன்னை நிர்வகிப்பது எப்படி என்பதை அறியாதவர்கள்தான் மன அழுத்தத்துக்கு உட்படுகிறார்கள்



ஆன்மீகம் 45

**வாழ்க்கையை சரியாகப் புரிந்து கொள்வது எப்படி?**

வாழ்க்கையை அதன் ஆழத்தில் உணர்ந்து கொள்கிற ஆர்வம் உங்களுக்கு உண்மையிலேயே இருக்குமென்றால், உங்கள் புரிதலை நீங்கள் மேம்படுத்த வேண்டும். இப்போதைக்கு உங்கள் புரிதல் ஐம்புலன்கள் எல்லைக்கு உட்பட்டு இருக்கிறது. பார்த்தல், நுகர்தல், கேட்டல், சுவைத்தல், தொடுதல். இந்த ஐந்து வழிகள் மூலமாகத் தான் உலகையும் அறிந்திருக்கிறீர்கள். உங்களையும் அறிந்திருக்கிறீர்கள். இந்த விநாடி நீங்கள் உறங்கி விட்டால் நான் காணமல் போய் விடுவேன்.



ஈசா தியானலிங்கம்

சுற்றியுள்ளவர்கள் காணமல் போவார்கள். உலகம் காணமல் போகும். நீங்களும் காணமல் போவீர்கள். இத்தனைக்கும் நீங்கள் உயிரோடு இருக்கிறீர்கள். நான் உயிரோடு இருக்கிறேன், அனைவரும் உயிரோடு இருக்கிறார்கள். இந்தப் பிரபஞ்சம் இன்னும் இருக்கிறது. ஆனால் உங்கள் அனுபவத்தில் எல்லாமே மறைந்து விட்டன. இது ஏன் நிகழ்ந்தது? ஏனென்றால், புரிதலுக்காக உங்களிடம் இருக்கும் ஐந்து கருவிகளின் கதவுகள் மூடிக் கொண்டன. எனவே எல்லாம் மறைந்து விட்டன. எனவே உங்கள் அறிதல் இந்த ஐந்து எல்லைகளுக்கு உட்பட்டிருக்கிறது. இந்த ஐம்புலன்களின் இயல்பு எத்தகையதென்றால் ஸ்தூல வடிவில் இருப்பவற்றைத் தான் அவற்றால் உணர முடியம்.

எனவே உங்கள் ஆசை, படைப்பின் தன்மையை உணரவேண்டும் என்பதற்காக இருந்தாலும் சரி, வெறுமனே அமைதியாக வாழவேண்டும் என்பதற்காக இருந்தாலும் சரி, உச்ச நிலையை உணர விரும்பினால் உச்ச நிலைக்கு உங்கள் புரிதலை மேம்படுத்த வேண்டும். அல்லது உங்கள் உடல், உங்கள் மனம், உங்கள் உணர்வு நிலை, உங்கள் சக்தி நிலை ஆகியவை நீங்கள் விரும்பும் விதமாக செயல்படும் அளவுக்காவது ஆறுதலை மேம்படுத்த வேண்டும்.

**இன்று நிர்வாகிகள் பலரும் மன அழுத்தத்தால் அவதிப்படுவது ஏன்?**

யாருக்கு அவருடைய உடல், அவரது மனம், உணர்ச்சிகள் மற்றும் சக்தி நிலைகள் இவற்றை நிர்வகிக்கத் தெரியவில்லையோ, அவர் வெளிச் சூழ் நிலையை நிர்வகிப்பது என்பது, அது தற்செயலான ஒன்று தான். இன்றைய நாளில் நீங்கள் எங்கே சென்றாலும் மன அழுத்த நிர்வாகம் குறித்து மக்கள் பேசுகிறார்கள். குறிப்பாக சில வருடங்களுக்கு முன்னர் நான் முதன் முறையாக அமெரிக்கப் பயணம் மேற்கொண்ட போது சென்ற இடங்களிலெல்லாம் மக்கள். மன அழுத்த நிர்வாகம் குறித்துப் பேசினார்கள். எதற்காக எவரொருவரும் மன அழுத்தத்தை நிர்வகிக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. உங்கள் தொழில், உங்கள் நிதிநிலை, குடும்பம், சொத்து எதுவென்றாலும் இதனை நீங்கள் நிர்வாகம் செய்ய வேண்டும். அது எனக்குப் புரிகிறது. எதற்காக மன அழுத்தத்தை நிர்வகிக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.

உலகில் ஏதேனும் ஒன்றைச் செய்தால் தாங்கள் மன அழுத்தத்திற்கு ஆட்பட வேண்டி வரும் என்ற முடிவிற்கே மக்கள் வந்து விட்டார்கள். ஒருவர் மன அழுத்தத்திற்கு உள்ளாவது அவர் ஈடுபடும் செயல்களினால் அல்ல. தன்னையே நிர்வகுப்பது எப்படி என்பதை அறியாததால் தான். செயலின் தன்மை ஒருவரை மன அழுத்தத்திற்கு ஆளாக்குவதில்லை. ஒரு அலுவலகத்தின் மிக எளிய செயலைச் செய்யும் ஊழியரைக் கேளுங்கள். அவரும் மன அழுத்தம் கொண்டவர்தான். உயர் அதிகாரியைக் கேட்டுப் பாருங்கள் அவருக்கும் மன அழுத்தம். அனைவருமே அவர்களது பணியினை மன அழுத்தம் தரக் கூடியது என நம்புகிறார்கள். எந்தப் பணியும் மன அழுத்தம் தரக் கூடியதல்ல. உங்கள் உடல், மன உணர்ச்சி மற்றும் சக்தி நிலைகளின் மேல் ஒரு கட்டுப்பாட்டினை கொண்டு வரவில்லையெனில் நீங்கள் மன அழுத்தம் கொள்வீர்கள்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# நீலாவணன் காவியங்கள்

## ஓர் அறிமுகம்

"தான் ஆசை பற்றி அறிய வந்ததை நீலாவணன் கம்ப காம்பீர்யத்தோடு விருத்தப் பாக்களால் பாடியிருக்கிறார். மட்டக்களப்பின் பழகு தமிழ்ச்சொற்கள் அவரின் கவிதா காம்பீர்யத்திற்குக் கைகட்டிச் சேவகம் புரிந்து இலக்கிய அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன. ஏடறியாப் பெண்களும் கவி இசைக்கும் தெற்கு மட்டக்களப்பின் கவிவளம் இக்காவியதின் இலக்கணக் கரைகளுக்குளடங்கிச் சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியாகப் பாய்கின்றது."

"எளிய பதங்கள், எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன், தமிழ் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருடத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுவதுடன் காவியதத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்." என்பது பாரதியின் கட்டளை. அதனை நிலாவணன் நிறைவேற்றியிருக்கிறார்.

இவ் வேளாண்மைக் காவியத்தின் மூலம் பாரதி நூற்றாண்டுத் தருணத்தில் இக்காவியம் முதன் முதலாக வெளிவந்திருந்தது சாலப் பொருத்தம்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

அதுவே "நீலாவணன் காவியங்கள்" நூலில் மூன்று காவியங்களுள் ஒன்றாக- மூன்றாவதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

"ஆரங்கே பொன்னம்மா உன்
அடுப்படி அலுவல் ஆச்சா
நேரமும் கடந்து போச்சே!
நீ என்ன செய்கின்றாய் போய்
சோறெடு சிலா...சிலா... ஏய்
சுரைக்காயை என்ன செய்தாய்?
நீறினை நெற்றியிலிட்டு
சோறொடும் மீனைப்பிட்டுச்
சுவைக்கின்றார் கந்தப்போடி"

என்று தொடங்கும் இக்காவியம் குடலை, கதிர் என்னும் இரு அத்தியாயங்களுடன் முழுவதும் விளையாமல் குறையிலே நின்றது ஆமாம்! காவியம் முற்றுப் பெறவில்லை. நீலாவணனின் மரணம் அதற்குக் காரணம். ஆனாலும் நூறு நாலு ஆண்டுகளுக்குப்பிறகு வரும் நம் சந்ததியினர் மட்டக்களப்பைத் தரிசிக்குமாறு அழகான காவியத்தைத் தந்து அமரராகிவிட்டார் கவிஞர் நீலாவணன்.

(முற்றும்)

**03 செங்கதிரோன்**

# பாட்டாளி எமது கூட்டாளி

**கவிதை**

பாட்டாளி வர்க்கம் உயரவேண்டின்
பாரினில் மாந்தர் கருணை வேண்டும்
பாட்டாளி உழைப்பின்றி ஏது உயர்ச்சி
காடுகளெல்லாம் நாடானதெவ்வாறு
நாட்டாமை உழைப்பு இல்லாவிட்டால்
அரசாள பாராளுமன்றம்தான் ஏது
ரோட்போரம் ஆட்சிமன்று அமையலாமோ
கூரையில்லா வீடுகளில் வாழலாமோ?

எண்ணியவை கண்ணியமாய் நடந்திடுமா
நாட்டாமை உழைப்பு இணையாவிட்டால்
எண்ணிப்பார்த்தால் சாண் வயிறு
சங்கடமாய் பசியென்று கதறுகையில்
திண்ணிய வீரர் உழைப்பெல்லாம்
கழனிகளில் கலக்காவிட்டால்
எண் சாண் உடல் உயிர் வாழுமா
படித்துப் பட்டம் பெற்றாவதென்ன

உறு செயல் பூண்டு நாட்டிற்கு
உழைத்திடும் தொண்டர்,மேன்மை
பெருவிருட்சம் போன்று பெரிதேயாம்
புல்லாகிப் பூண்டாகி மடிதலிற் பார்க்க
பெரும் செயலாற்றிப் பெரும் சேவை
புரியும் தொண்டர் மேலோரே
பெரு ஆசை நீக்கி பொது நலன் நாடி
தொண்டருட் தொண்டர் தாம் மேலோர்

விண்ணுக்கு வெள்ளி நிலா மகுடம் சூட்டும்
மண்ணுக்கு மழை நீரைத் தந்ததற்காய்
திண்ணிய உழைப்பாளிக்கு எந்த நிலா
மகுடம் சூட்ட முன் நிற்கும்
பண்ணிய படைப்புக்களைச் சீர்தூக்கின்
புண்ணிய பூமிதனில் உயர்ந்தவர் யார்
விண்ணுயர உழைத்தவனைப் பின்தள்ளி
சும்மா இருப்போர்க்குப் பொன்னாடை

நியாயங்கள் நிமிர்ந்து நின்று நியாயம் கேட்கின்
அநியாயங்கள் அம்மணமாய் அடங்கும்
தியானங்கள் செய்து நின்று உண்மை உணரின்
சும்மா இருந்து சொகுசாய் வாழ்வோர் அதிகம்
அநியாயங்கள் மலிந்த பின்புலத்தில்
தெளிவான தேடல்கள் கிடைக்குமா
கனியாக் காய்களாக வெம்பி விழும்
நியாயம் என்ற நேர்த்தியான காய்கள்

உலகை ஊமையாக்கும் இருளை
உதைத் துருட்ட ஆதவன் வரவேண்டும்
நலமுற ஆறுதல் தரவேண்டும்
உலகம் உய்வுற நல் உணர்வு வேண்டும்
பலம் மிக்க தோள்கள் பாடுபடும்
உழைப்பிற்கேற்ற ஊதியம் வேண்டும்
உளமாற நிலச்சுவாந்தர் உருக்கமுடன்
வியர்வை காய முன்பு கூலி வழங்க வேண்டும்

**வயலத் சந்திரசேகரம்**

# புரட்டாதி மாத இராசி பலன்கள்




(மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம்)

**நினைத்ததை சாதிக்கும் நேரமிது!**

***ஒளிவு மறைவின்றிப் பழகும் உன்னதமான குணம் பெற்ற சிம்ம இராசி நேயர்களே!***

நெளிவு சுளிவுகளை கற்று வைத்திருப்பவர்கள் நீங்கள். நெஞ்சில் ஊக்கமும், தைரியமும் மிக்கவர்களாக விளங்குவீர்கள். விரோதங்களைப் பற்றி கவலைப்பட மாட்டீர்கள். விரும்பியதை செய்து முடித்தே ஆக வேண்டுமென்று சொல்வீர்கள்.

மற்றவர்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் தலைமைப் பொறுப்பேற்று, தக்க விதத்தில் முடிவு சொல்வீர்கள்.

உங்களுக்கு இம் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் தனஸ்தானத்திலும், தனாதிபதி இராசியிலும் சஞ்சரிப்பது யோகம்தான். பொருளாதார நிலை உயரும். பொன்னான எதிர் காலத்தை அமைத்துக் கொள்ள வாய்ப்புகள் கைகூடிவரும்.

குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். கொடுக்கல், வாங்கல் ஒழுங்காகும். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், வக்ர குருவாக இருந்தாலும் கூட அதன் பார்வை பலத்தால் சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வந்து சேரும். அதை உபயோகப்படுத்திக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

தனாதிபதி உச்சம் பெறும் இந்த மாதத்தில் உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு வாங்கும் முயற்சியில் வெற்றி கிட்டும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடும் கூட்டு முயற்சியாலும் இலாபம் காண்பீர்கள்.

சுகாதிபதி செவ்வாய் நீச்சம் பெறுவதால், அடிக்கடி உடல் நிலை தொல்லைகள் உருவாகலாம். எனவே அப்போதைக்கு அப்போது மருத்துவ ஆலோசனை பெற்று ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்வது நல்லது.

விரயாதிபதி உச்சம் பெற்று மாதம் தொடங்குவதால், மாதத்தின் தொடக்கத்தில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவதும் நல்லது. மற்றவரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகளை ஒருமுறை சரிபார்த்து கொள்ளுங்கள்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை புதன் தனலாபாதிபதியாக இருக்கிறார். ஒருவரது வாழ்க்கைத்தேவைகள் பூர்த்தியாக தனலாப ஸ்தானம் தான் பலம் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான், நினைத்த செயலை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க இயலும்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, செப்டெம்பர் 18 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார்.

எனவே, குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். குடியிருக்கும் வீட்டைக் கூட விலைக்கு வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

புதனும், சுக்ரனும் ஒன்றாக இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்கள். எனவே, புத-சுக்ர யோகம் என்னும் பொன்னான யோகம் செயற்படப் போகிறது. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

ஆரம்பித்த தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் இரு மடங்கு வருமானம் வந்து சேரும். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். நீண்ட நாள் நடைபெற்ற வழக்குகளில் கூட வெற்றி கிடைத்து நிலையான மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்வீர்கள்.

இம்மாதம் முறையாக அனுமன் வழிபாட்டை மேற்கொண்டால், இல்லத்தில் ஆனந்தம் குடியேறும். ஸ்ரீராம ஜெயம் மாலையை மாருதிக்குச் சூட்டினால் இடர்கள் விலகும். இனிமை சேரும்.

இம்மாதம் இனிய மாதமாகவே உங்களுக்கு அமையப்போகிறது. தொட்டது துலங்கும். கைபட்டது வளரும் என்ற சூழ்நிலைக்கு ஏற்ப குடும்ப உறுப்பினர்கள் உங்களைக் கொண்டாடுவர்.

உங்கள் குரலுக்கு மதிப்பு கொடுப்பர். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் மற்றும் திருமண வாய்ப்புக்களுக்கான நேரம் கைகூடி வருகிறது.

உங்கள் பெயரில் தொடங்கிய தொழில் வெற்றிநடைபோடும். எனவே, கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். சர்ப்ப சாந்தி பரிகாரம் செய்தால் சகல யோகங்களும் வந்து சேரும்.




(உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்)

**பொறுமையால் வந்து சேரும் பெருமை!**

***அமைதியாக இருந்து கொண்டே அரிய பணிகள் பலவும் செய்யும் கன்னி இராசி நேயர்களே!***

விதண்டாவாதம் என்பது உங்களுக்கு பிடிக்காது. வீட்டில் இருப்பவர்களை அனுசரித்தே செல்வீர்கள். வேலைக்காரர்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. கலைகளை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆன்மீகத்திலும் உங்கள் கவனம் அதிகமாகவே இருக்கும். பழைய சடங்கு, சம்பிரதாயங்களை விடாமல் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவீர்கள்.

உங்களுக்கு இம் மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் விதத்திலேயே அமையப்போகிறது. மாதத் தொடக்க நாளிலேயே உங்கள் இராசி நாதன் புதன் உச்சம் பெறுகிறார். அதோடு விரயாதிபதியும் கூடியிருப்பதால் எதிர்பார்த்த அளவு பணம் வந்தாலும், இருமடங்கு செலவாகலாம். பொறுமையை கடைப்பிடித்து ஜென்மச் சனி முடியும் வரை நிதானத்தோடு செயற்பட்டால், நிம்மதியையம், நிலைத்த ஒற்றுமையையும் வரவழைத்துக் கொள்ள இயலும்.

குரு வக்ரம் பெறுவது ஒரு வழியில் நன்மை தான். 4,7 க்கும் அதிபதி வக்ரம் பெறும் பொழுது, குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். கொடி கட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக முடிவுக்கு வரும். குருவின் பார்வை பலத்தால் 2, 12 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன.

எனவே, பகையாக இருந்தவர்கள் நட்பாக மாறுவர். நட்பாக இருந்தவர்கள் பகையாகவும் மாறலாம். காரணம், சனியின் ஆதிக்கமும், உங்கள் இராசியிலேயே உள்ளது. எனவே, ஏழரைச் சனியில் எந்தச் சுற்று நடப்பவராக இருந்தாலும், சனிக்கிழமை தோறும் விரதமிருந்து காக வாகனத்தானை வழிபட வேண்டிய அவசியமாகும். தசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடுவதன் மூலமும் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

மாதத் தொடக்க நாளில் இராசிநாதன் புதன் உச்சம் பெறுகிறார். அத்தோடு, விரயாதிபதி, தனாதிபதி, 5, 6க்கு அதிபதி ஆகியோரும் இணைந்து கூட்டுக் கிரக யோகத்தைத் கொடுப்பதால் எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறும். அரசு வழி ஆதரவோடு வீடு கட்டும் முயற்சி, வாகனம் வாங்கும் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் அகலும். கல்யாண பேச்சுவார்த்தைகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

புதனும், சுக்ரனும் இணைந்து புத- சுக்ர யோகமாக செயற்படப் போகிறது. ஒக்டோபர் 4 ஆம் திகதி துலாத்தில் புதனும், ஒக்டோபர் 5 ஆம் தேதி துலாத்தில் சுக்ரனும் சேருகின்றார்கள். எனவே, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்த படியே வந்து சேரும். கடன் சுமை குறையும். வாகன மாற்றம் செய்து மகிழ்ச்சி காண்பீர்கள்.

## சிவல்புரி சிங்காரம்

இம்மாதம் நவக்கிரக வழிபாடு உங்களுக்கு நன்மையை வழங்கும். அத்தோடு சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயப் பிரபுவையும், விஷ்ணு இலக்குமியையும் வழிபட்டு வாருங்கள். துளசி மாலை அணிவித்தால் துயரங்கள் தீரும்.

இம்மாதம் வரவும்- செலவும் சமதாகும் மாதமென்றே சொல்ல வேண்டும். குழந்தைகள் வழியில் கூடுதல் கவனம் செலுத்திப் பார்த்துக் கொள்வது நல்லது.

பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். உறவினர்களை அனுசரித்து செல்வதன் மூலமே உற்சாகத்தோடு செயற்பட இயலும். மாதத் தொடக்கத்தில் சந்திர பலம் கூடியிருப்பதால், தாய்வழி ஆதரவு கிடைக்கும்.

தக்க சமயத்தில் கை கொடுத்து உதவவில்லையே என்ற கவலை இனி மாறும். கணவன்- மனைவி ஒற்றுமை பலப்படும். புத்திர விருத்திக்கான வாய்ப்புகளும் கைகூடி வரும். குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். குதூகலம் கூடும். (தொடரும்)

# ரஷ்யாவுக்கான நேரடி விமானசேவை ஆரம்பம்

(கொழும்பு)

முதல்முறையாக மொஸ்கோவுக்கான விமானப் பயணத்தை ஸ்ரீலங்கன் எயார்வேஸ் விமான சேவை நேற்று ஆரம்பித்தது.

இதன்படி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கும் மொஸ்கோவின் டோம்டெடோவோ விமான நிலையத்துக்கும் இடையே வாராந்தம் இரு சேவைகள் இடம்பெறும்.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் யூஎல் 531 விமானம் நேற்று காலை 7.20 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சரித்திரபூர்வமான முதலாவது மொஸ்கோ பயணத்தை ஆரம்பித்தது.

நேற்றைய பயணத்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள் பட்டியலில் இலங்கையில் உள்ள ரஷ்ய தூதுவர் விலாடிமிர் பி.மிக்யாலோவ், திருமதி மிக்யாலோவ். ஸ்ரீலங்கன் விமான சேவையின் வர்த்தக நடவடிக்கைகளுக்கான பொறுப்பதிகாரி மொஹமட் பசீல், ரஷ்யா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவுக்கான பிராந்திய முகாமையாளர் லால் பெரேரா மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் பிரதிநிதிகளும் அடங்கினர்.

இந்த விமானம் டுபாய் வழியாக சென்று அதே தினம் பிற்பகல் 4.40மணிக்கு மொஸ்கோ சென்றடையும்.

(4-2)

# விபச்சாரத்தில் ஈடுபட்ட சிறுமிக்கு விளக்கமறியல்

நடமாடும் விபச்சார குழுவொன்றுடன் தொடர்புடையதாக கூறப்படும் ஒரு சிறுமி உட்பட இருவர் கொள்ளுப்பிட்டி பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். விபச்சார குழுவொன்றை நடத்தியதுடன் சிறுமியொருவரை விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாக கூறப்படும் பிரதான சந்தேகநபரை கொழும்பு கோட்டை நீதிவான் லக்னா ஜயரட்ன முன்னிலையில் கொள்ளுப்பிட்டிய பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

இவ்விபச்சார நிலையத்தை முற்றுகையிடுவதற்காக மாறுவேடத்தில் சென்ற உத்தியோகத்தரிடம் 2 ஆயிரம் ரூபா கட்டணம் வசூலித்ததாகவும் 17 வயதான மேற்படி சிறுமியை கொள்ளுப்பிட்டி கரையோர வீதியில் வைத்து அந்த உத்தியோகத்தரிடம் ஒப்படைத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் பின் மேற்படி இரு சந்தேகநபர்களை கைது செய்ததுடன் விபச்சாரத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் வாகனமொன்றையும் கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர்.

பொலனறுவையைச் சேர்ந்த இந்நபர் போலி சாரதி அனுமதிப்பத்திரமொன்றை பொலிஸாரிடம் சமர்ப்பித்ததாகவும் அதன் மூலம் அவர் தண்டனைக்குரிய மற்றொரு குற்றமிழைத்துள்ளதாகவும் பொலிஸார் குற்றம் சுமத்தினர்.

இந்நிலையில் பிரதான சந்தேகநபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் 17 வயதான மேற்படி சிறுமியை எதிர்வரும்22 ஆம் திகதி வரை இரட்சணிய சேணையில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(4-2)

# யாழ்ப்பாண நகரில் காகில்ஸ் நிறுவனம்

## ரூ.500 மில்லியனில் வர்த்தகதொகுதி அமைப்பு

CARGILLS (CEYLON) PLC

காகில்ஸ் (சிலோன்) பி.எல்.சி நிறுவனமானது 500 மில்லி யன் (50 கோடி) ரூபாய் முதலீட்டில் புதிய வர்த்தக தொகுதி ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்கும் நட வடிக்கையை ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி யில் போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிரே அமைக்கப்படும் இக் கட்டதொகுதியின் கட்டுமான வேலை கள் கடந்த வியாழக்கிழமை ஆரம் பித்து வைக்கப்பட்டன. இதற்கான கட்டுமான வேலைகள் நவலோகா கட்டுமான நிறுவனத்திடம் வழங்கப் பட்டுள்ளது.

இப்பணிகள் 16 மாதத்தில் முடிப் பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நான்கு மாடிகளைக் கொண்ட தாக அமையவுள்ள இவ்வர்த்தக தொகுதியில், புதிய சில்லறை வணிக வளாகம், வங்கி, உணவு விடுதி, 3 சினிமா திரையரங்கு மற்றும் கார் தரிப்பிட வசதி கொண்டதாக அமைக் கப்படுகிறது என காகில்ஸ் (சிலோன்) பி.எல்.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே காகில்ஸ் விற் பனை நிலையங்கள் மானிப்பாய் , யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் அண்மையில் ஆரம் பிக்கப்பட்டு சிறிப்பான முறையில் செயற்பட்டு வருகிறது.

# பங்குச்சந்தைக் கருத்தரங்கு

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யின் யாழ்.கிளையின் ஏற்பாட்டில் 'பங்குச் சந்தை முதலீட்டு நடை முறைகள்' எனும் தலைப்பில் கருத் தரங்கு ஒன்றினை நாளை திங்கட் கிழமை மாலை 3.30 மணிக்கு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளை யில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளையா னது பாடசாலை மாணவர்களுக்கு நிதிச் சந்தை தொடர்பான விளக்க மளிக்கும் நோக்குடன் தொடர் விளக்கமளிக்கும் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள விரும்பும் பாட சாலை அதிபர்கள் தம்மை தொடர்பு கொண்டால் தெளிவூட்டல் கருத் தரங்குகளை தங்கள் பாடசாலை களுக்கே வந்து மேற்கொள்வதுடன் மாணவர்களுக்கு நிதிச்சந்தை நடைமுறைகள் அடங்கிய கையேடு களும் இலவசமாக வழங்கப்படும் எனவும் கொழும்பு பங்குப் பரிவர்த் தனையின் யாழ்.கிளை முகாமை யாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக தகவல் களை 0212221455 என்ற தொலை பேசி மூலமும் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

# குத்தகை வசதிக்கு புதியதொரு பரிமாணம்

## செலான் ஸ்மார்ட் லீஸ்


Mr. Kapila Ariyaratne

செலான் வங்கியானது இலங் கை முழுவதிலும் உள்ள தனது தற்போதைய வாடிக்கையாளர்கள் மற்றும் எதிர்காலத்தில் வாடிக்கை யாளர்களாக இணைந்து கொள்ள வுள்ளவர்களுக்காக அண்மை யில் செலான் ஸ்மார்ட் லீசிங் (Seylan Smart Lease) வசதியை அறி முகப்படுத்தியதன் மூலம் தனது சேவைகளின் தொடரினை மேலும் விஸ்தரித்துள்ளது.

செலான் ஸ்மார்ட் லீசிங் என்ற நாமம் மிகவும் சிறப்பாக எடுத்துரைப் பதைப் போலவே இந்த குத்தகை வசதியானது வாடகையை செலுத் தும் விடயத்தில் முழுமையான நெகிழ் வுத்தன்மைகளைக் கொண்ட தெரிவு வசதிகளை வழங்கும் மிக நேர்த்தியான ஒருசேவையாகும்.

அதிக வருமானம் (போனஸ் கொடுப்பனவுகள், பருவ கால வியா பாரம் மற்றும் வருமானம் போன் றவை கிடைக்கப்பெறும் காலங்க ளில் நியம மாதாந்த வாடகையை விடவும் அதிகமான தொகையினை செலுத்துவதற்கான தெரிவு ஒன்றினை இது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

அதிகளவு வருமானம் உழைக் கும் மாதங்களில் அதிக தொகையை செலுத்துவதன் விளைவாக எஞ்சி யுள்ள மீளச் செலுத்தும் காலப் பகுதிக்காக செலுத்துவதற்கு மீதம் இருக்கும் வாடகைத் தொகையா னது மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகைக்கு அமைய குறைவடை கின்றது. அதாவது சம்பந்தப்பட்ட வருடத்திற்குள் குத்தகையின் மிகு திக் காலப் பகுதிக்காக குறைந்தள விலான வாடகையை ஒருவர் செலு த்த முடியும் என்பதை இது மிகச் சிறப்பாக தெளிவுபடுத்துகின்றது.

செலான் லீஸ் ஆனது தனி நபர் கள் (தொழில்வாண்மையாளர்கள்) , நிறைவேற்று அதிகாரிகள், பங்கா ளித்துவ முயற்சியாளர்கள் போன் றோர) சிறிய நடுத்தர முயற்சிகள் (ஏக உரிமையாளர்கள், பங்காளித் துவ முயற்சியாளர்கள் போன்றோர) கூட்டாண்மை நிறுவனங்கள் மற் றும் சௌகரியமான வடிவில் அமை ந்த இந்த குத்தகை வசதியை தம்ம ளவில் பயன்படுத்தி வாழ்க்கையை இலகுவாக்கிக் கொள்ள விரும்பும் ஏனைய தரப்பினரை இலக்காகக் கொண்டுள்ளது.

மோட்டார் கார்கள், வான்கள், ட்ரக் வண்டிகள், இரட்டைப் பயன்பாட்டு வாகனங்கள், மோட்டார் சைக்கிள் செலான் ஸ்மார்ட் லீசிங்கில் இயந் திர சாதனங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக செலான் ஸ்மார்ட் லீஸ் வசதியினை பயன் படுத்திக் கொள்ளலாம்.

நாடெங்கிலும் உள்ள 131 செலான் வங்கிக் கிளைகளிலும் இச்சேவை யப் பெற்றுக் கொள்ளலாம் என செலான் வங்கியின் பொது முகாமை யாளர் /பிரதம நிறைவேற்று அதிகா ரியான கபில ஆரியரத்தன தெரி வித்தார்.





கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பிரபல பல் தேசியக் கம்பனியான செவ்ரான் லூப்ரிகன்ஸ் இன் தலைவர் டேனி ரோடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தை படத்தில் காணலாம்.

# ஏசியன் புலமைப்பரிசில் பரீட்சை இன்று

CSC-ASIAN COMPUTER EDUCATION

சி.எஸ்.சி-ஏசியன் கல்வி நிறு வகம் தகவல்தொழில்நுட்பம், மல்ரிமீடியா மற்றும் ஆங்கில பயிற் சிக்கான புலமைப்பரிசில் திட்டத்தை வழங்கும் நோக்குடன் புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகர், நெல்லியடி, சாவகச்சேரி மற்றும் நாட ளாவிய ரீதியில் உள்ள தமது கிளை களிலும் நடத்தவுள்ளது.

ஆண்டுக்கொருமுறை நடை பெறும் இப் புலமைப்பரிசில் பரீட் சையில் தோற்றி 40%;50%; 60% மற்றும் 75% புலமைப்பரிசிலைப் பெறமுடியும் ஏசியன் நிறுவனத்தி னர் அறிவித்துள்ளனர்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.29 | 110.91 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 171.99 | 175.94 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 150.50 | 154.58 |
| சுவிஸ் பிராங் | 124.44 | 128.49 |
| கனேடிய டொலர் | 110.24 | 113.57 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.85 | 115.53 |
| சிங்கப்பூர் டொலர் | 87.52 | 90.03 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.45 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.32 | |
| ஐக். அரபு இராச்சிய திராம் | சுட்டி விலை 29.97 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# நோக்கியா இடத்தைப் பிடித்தது சாம்சங்




செல்போன் துறையில் முன் னணி நிறுவனங்களாக திகழும் நோக்கியா, சாம்சங் நிறுவனங் களிடையே முதலிடத்தைப் பிடிப் பது யார் என்ற போட்டியில் சாம்சங் நிறுவனம் முன்னேறி வருவதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் 2010/11 ஆண்டில் சாம் சங் நிறுவனம் 21.7% அதிகரித்து 5 ஆயிரத்து 720 கோடி இந்திய ரூபாயாக உள்ளது. அதேசமயம் அதற்கு முந்திய ஆண்டில் இதன் இலாப விகிதம் 4 ஆயிரத்து 700 கோடியாகும.

நோக்கியாவின் வருமானம் 2010/11இல் 12 ஆயிரத்து 929 கோடியாகும். அதற்கு முந்தைய ஆண்டில் இந் நிறுவனத்தின் வரு மா ணம் 12 ஆயிரத்து 900 கோடியாகும்.

ஜனவரி முதல் ஜூலை வரை யிலான நடப்பு ஆண்டில் நோக்கி யா நிறுவனம் 37.5 சதவீதம் சந்தைப் பிடித்துள்ளது. முந்தைய ஆண்டில் இவை 49.3 சதவித அளவைக் கொண்டிருந்தது.

சாம்சங்நிறுவனம் இந்த ஆண்டில் முதல் 7 மாதங்களில் 28 % அள விற்கு சந்தையை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் இதேகால கட் டத்தில் இவை 20.1 சதவீதத்தையே கொண்டிருந்தது.

கடந்த 2007/08 ஆண்டில் சாம்சங் நிறுவனம் மாதம் ஒன் றுக்கு 2 லட்சம் செல்போன்களை விற்பனை செய்தது.

நோக்கியா நிறுவனம் இந்த ஆண்டுகளில் மாதம் ஒன்றுக்கு 4 மில்லியன் போன்களை விற் பனை செய்தது குறிப்பிடத்தக்கது.

## ஆசியாவில் கோடீஸ்வரர்கள் அதிகரிப்பு

2015-ம் ஆண்டில் ஆசியக் கண்டத்தில் உள்ள நாடுகளில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 25 இலட்சத்திற்கும் மேல் உயரக் கூடும் என ஆய்வு ஒன்று தெரி வித்துள்ளது.

சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதால் இந்நாடுகளின் மக்களின் சேமிப்பு மற்றும் வாழ்க் கைத் தரம் உயர்ந்துள்ளது.

இதனால் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அய்வு தெரிவித்துள்ளது.

இந்தியா, சீனா போன்ற நாடு கள் மக்கள் தொகை அதிகளவில் இருந்த போதிலும் வயது வந்தவர் களின் தனிநபரின் சொத்துகள் எனக் கணக்கிடும் போது மிகவும் குறைந்தே காணப்படுகின்றது.

அதேசமயம் சிங்கப்பூர், ஹொங் காங் நாடுகளின் இதன் விகிதம் அதிகரித்துள்ளது.

மேலும் கோடீஸ்வரர்களின் எண்ணிகை அதிகரிப்பில் சீனா வின் பங்களிப்பு அதிகமாக இருக் கும் எனவும் ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

## 38 இலட்சம் சுற்றுலாப் பயணிகள்

2011ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஓகஸ்ட் வரை இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டு பயணிகள் எண்ணிக்கை 38 இலட்சத்து 19 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இது கடந்த 2010ஆம் ஆண்டு இதே காலப் பகுதியில் வருகை தந்த சுற் றுலாப் பயணிகளை விட 10.20 சதவீதம் அதிகமாகும். இந்தியா விற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 0.5 சதவீதம் என்ற அளவில்தான் உள் ளது. இதைவரும் 12-வது ஐந்தா ண்டு திட்ட காலத்திற்குள் ஒரு சத வீதமாக உயர்த்த இந்திய சுற்று லாத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6990.33 | 6870.92 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6286.93 | 6209.24 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 10,206.33 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** ரீஸ் அக்ரோ (6.40), சதோசா மோர்ட்டாஸ் (405.20), றீஜின்ஸ்(215.00), முல்லோர்ஸ்(3.60), எஸ்.எம்.பி.லீசிங்(W)(1.50)

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** கொமர்ஷல் வங்கி(X) (80.00), கொமர்ஷல் வங்கி (117.10), புளூ டைமன்ஸ்(X)(4.40), எச்ஏவி பூட்(58.70), புளூ டைமன்ஸ்(9.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### மனத்திரையின் மௌனம்

புலரும் பொழுதுகள் யாவும்
வேதனைகளின் மடியில்
நினைவுகளைக் கிளறியபடியிருக்க
அவலங்களை நினைத்து
உருகிக் கிடக்கிறது மனது

கொட்டும் மழையிலும்
கொதிக்கும் வெயிலிலும்
திக்குத் தெரியாத காட்டில்
திணறிக் கிடக்கிறது வாழ்வு

பாதுகாப்பு வலயத்தில்
பாழ்படுகிறது குடியிருப்பு
குந்த ஒரு நிலமின்றி
வெந்து போகிறது எம் வாழ்வு

உழுதுண்ட வாழ்வெல்லாம்
பழுதுண்டு கிடக்க
வீதிக்கரை மா மரமும்
ஒற்றைப் பனை மரமும்
வரண்ட எம் வாழ்வை
சுமந்தபடி நிற்கிறது

அ.பூவானந்தன்
வயாவிளான்

### நான் வருவேன்

திட்டிக் கொள்
கொட்டிக் கொள்
தீரவில்லையா
தீ கொண்டு மூட்டிக் கொள்
தீராதடி உன்மேல்
நான் கொண்ட பாசம்
விட்டுச் சென்றாய்
வெட்டிக் கொண்டாய்
விளையாட்டாய் இன்று
விதி செய்த சதி என்று
விலகிச் செல்கிறாய்
விடமாட்டேன் உன்னை
விண்ணைத் தாண்டியும்
உன்னை அடைவேன்

செ.சுசி, குப்பிளான்.

### உனக்காக நான்

என் நினைவுக் கற்களை
தட்டித் தட்டிச் செதுக்கிய
இனிய காதல் சிற்பம்...
மலரின் மென்மையையும்
புயலின் வலிமையையும்
துன்பத்தின் எல்லையையும்
தாண்டி
இன்னமும் உயிர்ப்புடன்
உனக்காகவே...

இரா.நவதர்சினி
வயாவிளான்.

### அவரவர் பார்வையில்

பார்வையும் பிரிவும்
பார்க்கும் போதெல்லாம் நினைத்தேன்
உன்னைப் பிரியக்கூடாது என்று
பிரியும் போதெல்லாம் நினைக்கிறேன்
உன்னை ஏன் பார்த்தேன் என்று
வெறுப்பு
உன் விழிகளை நீ எரிக்கின்றாய்
என் கலங்கரை விளக்கு
அதுதான் என்பதை புரியாமல்
மெழுகுவர்த்தி
இருள் சுமந்து உருகி நீ
ஒளியூட்டும் இரவு தேவதை

கங்கா.பா
வண்ணார்பண்ணை

உத்தரவாதமில்லாது...
உத்தரவாதமில்லாது
ஊசலாடிக் கொண்டிருப்பது
உன் உயிர் மட்டுமல்ல தோழா!
நம் இனமும் தான்...
விழித்திரு
நாளைய பொழுது எப்படி
அது உனது சிந்தனை...
நாளை நீ இன்றி என்ன செய்ய
எது உன் குடும்பத்தின் சிந்தனை...
சிந்தித்து செயற்படு தோழா!

ஆர்.ராஜ்
பருத்தித்துறை

### உண்மை இறக்குமா

கண் மூடித் திறக்கையில்
கண்முன்னே பல உயிர்கள்
கண்ட துண்டமாய் கிடந்ததை
கண்கள் மறக்குமா?
புதிதாய் மலர்ந்த மலர்கள்
புது உலகை ரசிக்கும் முன்பே
உதிர்ந்து போனதை
உள்ளம் மறக்குமா?
குறுகிய காலத்தில்
கொன்று குவிக்கப்பட்ட தமிழினத்தை
உலகம் மறக்குமா?- இல்லை
உண்மை இறக்குமா

வல்வைத் தமிழ்
வல்வெட்டித்துறை

### உதிர்வுகள்

உன் ஞாபக உரசல்களில்
எத்தனை கனவுகள்
தீர்ந்து போனது
தீண்ட மறுத்த
நீண்ட இரவுகளும்
உன் நினைவுகளால்
நிஜங்களை தாண்டிப்போனது
கனவுப் பிம்பங்கள் மட்டும்
என்னிடம் எஞ்சிப்போனது
கானல் நீரைப்போல

சு.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### இமயம் தொட...

உயிர்களுக்கு மதிப்பளிக்கும்
உலகத்தை உருவாக்க
ஒன்றிணைவோம்
முன்னொன்று வைத்து
புறம் சொல்லும் மனிதர்களை
இல்லாதொழித்திடுவோம்
இல்லார்க்கு உள்ளவர்கள்
உவந்தருளும் உலகத்தை
உருவாக்கு உயர்வாக்கு
நிலைநாட்டு மனிதத்தை


மாவை நா.கஜேந்திரன்

### விடியலின் கீதமவள்

உன் ஞாபக முட்கள்
என் உள்ளத்தில்
எப்போதும் தைத்துக் கொண்டிருக்கிறது
உன் பாதச் சுவடுகளில்
விழி வைத்த வண்ணம்
துச்சாதனன் வாழும்
காம தகனம்
நிறைந்த
இப்பூமியில்
உன் மானத்தின்
நிலைதான் ஏதோ?
ஏற்றி வைத்த
என் வாழ்க்கைத் தீயில்
இருண்டு போன என் வாழ்வு
மௌனித்து நிற்கும்
மௌனத்தீயாக
எண்ணெயற்று
அணைந்து போனேன்
என் விரக நிலவை
எண்ணியபடி

எம். கலைவாணி
யாழ்.பல்கலைக்கழகம்

## மௌனத்தின் தேடல் - 88



### ஏன் அவலம்?

தூக்கு கயிறு
மனிதனுக்கு
மட்டும் இல்லை
வாக்கு வாதம்
செய்ய முடியாத
மிருகத்துக்குமா?

சு.அபர்ணா
வட்டுக்கோட்டை

### எழுச்சி

அடக்கி ஒடுக்கும்
அதிகார வர்க்கத்தை
எட்டி உதைக்கவா-நீ
எழுந்து நிற்கிறாய்...?

வா.ஜெயபிரசன்னா
யா/ஹாட்லிக் கல்லூரி

### ஐந்தறிவின் ஆதங்கம்

தூக்கி தூக்கி
துவண்டு போன என்னை
தூக்கி விடுவாய்
என நினைத்தேன்-இப்படி
தூக்கிலிடுவாய்
என்று நினைக்கவே இல்லை

நெய்தல்
தேன்மொழி

### மீட்சியில்லை

ஆறறிவு படைத்த
மனிதன்
ஐந்தறிவு படைத்த
உந்தன் மீது
சுமக்க முடியா
சுமையை சுமந்து.
தமக்கும் ஐந்தறிவு
என்பதைக் காட்டுகிறான்

மா.கிருபாகரன்
பண்ணாகம்

### அடிபணிவாய்

வாயில்லா ஜீவனை
வாட்டி வதைக்கும் மனிதா
அதிகாரம் உன்னிடம்
உள்ளதால் நீ அதை
வருத்துகிறாய்
அதுவே ஓர் நாள்
உன்னை விட்டு போகையில்
நீயும் அடிபணிவாய்

யாழ்நிலா
யாழ்ப்பணாம்

### சுமைதாங்கி

சுமைதாங்கும் நீ ஒரு
சுமைதாங்கிதான்
ஆனாலும் அளவிற்கு
அதிகம் இது என்பதனை
மனச்சாட்சியை
மண்ணிலே புதைத்த
உன் எஜமான் காதில்
ஒலிக்கும் படி கூறு

இனியா, நல்லூர்

### மூட மனிதா

ஆறு அறிவு படைத்த மனிதா
உன்னால் தானோ இந்த
நவீன உலகம் உருவானது
இன்னும் ஏன் இந்த ஐந்தறிவு
ஜீவனை வதைக்கிறாய்
உண்மையிலே உனக்கு ஆறறிவா?

விவேக்சன்
ஏழாலை வடக்கு

### ஐயா ஆசை!

ஆறறிவு படைத்த மனிதா
ஆசைக்கு பாரமேற்றி
ஐந்தறிவு ஜீவனை
அவலப்பட வைக்காதே...?

மு.அருமைச்சந்திரன்
கறுக்காய்

### அடிமை

அடிமை நிலையில் கட்டுண்டு–நீ
அந்தரத்தில் தொங்குவது
எந்தவொரு தாக்கத்திற்கும்
மறுதாக்கம் உண்டென
உலகறியச் செய்யவோ?

வ.வாமணன்
பருத்தித்துறை

### கனமாற்றம்

அன்றைய நாட்களில்
பொதி சுமந்தது கழுதை
இன்றைய நாளில்
கழுதையை சுமக்கிறது
பொதி காலம்
இப்படியுமானதோ?

ஸிந்தா.வி
வடகோப்பாய்

### கலியுகம்

என்ன இது
இக்கலியுகத்தில்
வண்டியின் பாரம்
தாங்காது
இந்தக்குதிரையும்
பறக்கின்றதே

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### ஈனச்செயல்

மானுட வாழ்வின் உயர்வுக்காய்
மானிலத்தினில் உழைக்கின்ற
மந்தை இனங்களை
மனிதப் பண்பினை மறந்து
மாய்க்கும் மனிதன் ஈனச்செயல்
பண்பற்றதொன்றாகும் இதை
மாற்றி மனதா வாழ்ந்திடு
மாண்புறும் உன் வாழ்வு

இ.கிஷன்
சரசாலை

### கர்வத்தில் குதிக்குது

பாரத்தை இழுக்காது
பாவத்தை இழுக்கவா
மர்மக் குதிரையிது
கர்வத்தில் குதிக்குது

குளப்பிட்டி
க.அருமைநாயகம்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 89

அன்பு வாசகர்களே !



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
- ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 23.09.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

## ஜெனீவா கூட்டத்தில்

# இலங்கை அரசு மண்டியிட்டதால் சர்வதேச அழுத்தம் குறைவடைந்தது

### சிறி துங்க ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவா மாநாட்டில் இலங்கை அரசு மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டதால்தான் சர்வதேச நாடுகள் தனது இறுக்கமான கெடுபிடிகளைத் தளர்த்திக் கொண்டன என்று ஐக்கிய சோசலிச கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் 18 ஆவது கூட்டத் தொடரில் தப்பிப் பிழைத்துக் கொள்ளும் நோக்குடனேயே அரசு தனது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை வெளியிடும் காலத்தை இழுத்தடித்தது.

இதனால்தான் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானதும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்போம் என சர்வதேச சமூகம் தீர்மானித்துள்ளது.

ஜெனீவாவில் உறுதிமொழிகளை அள்ளி வீசிய இலங்கை அரசு அதனை இங்குவாழ் மக்களுக்கு கட்டாயம் செய்ய வேண்டும். இல்லையேல் இலங்கைக்கு கெட்ட காலம் என்றே சொல்லலாம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு.

அதனால்தான்சர்வதேசம்பொறுமை காக்கிறது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு அரசு வெற்றிபெற்றுவிட்டோம் என மார்தட்டும் வேலையை விடுத்து மக்களுக்கு நீதியை வழங்க முன்வரவேண்டும் என்றார். (4-2)

## ஐ.நா. சபைக் கூட்டத்திற்கான கிலானியின் பயணம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானிக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பு நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாக காணப்படுவதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

எனினும் பாகிஸ்தானில் நிலவி வரும் வெள்ள அனர்த்த நிலையினால் பாகிஸ்தான் பிரதமரின் அமெரிக்க விஜயம் ஒத்திவைக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் சிந்த் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வெள்ள அனர்த்தம் காரணமாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தின் 66 ஆவது அமர்வுகளில் பாகிஸ்தான் பிரதமர் கிலானி பங்கேற்க மாட்டார் என இறுதியாக வெளியான தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-2)

## இலங்கை மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடாது

### பிரிட்டன் கன்சர் வேடிவ் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மீது வெளிநாட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடாது என்று பிரிட்டன் கன்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரிட்டன் கன்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரிட்டன் அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் செயலாளருமான பிரையன் பின்லே என்பவரே பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்திய உபகண்ட நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள மனக் காயங்களை குணப்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பமொன்று வழங்கப் பட வேண்டும். வெளிநாட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும்போது இலங்கையினால் அதனை மேற்கொள்ள முடியாது போய்விடும்.

இலங்கையைப் பொறுத்தவரை பிணக்குகள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தபடி மனித உரிமைமீறல் விடயங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் முன்னேற்றமொன்றை வெளிப்படுத்தியுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதான அரசியல் தீர்வொன்றிற்கும் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

எனவே ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கைக்கு வாய்ப்பொன்று அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-2)

## போலி நாணயத்தாள் அச்சிட்ட நபர்கள் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பில் போலி நாணயத்தாள்களை அச்சிட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சேருநுவர பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெருகல் கோயில் திருவிழா வில் போலி நாணயத் தாள்களைப் பயன்படுத்திக் கொடுக்கல்- வாங்கல்களில் ஈடுபட்டிருந்த போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கணனிகளைப் பயன்படுத்தி போலி நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-2)

## 2011.09 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 96- டொமிஷியன் கொலை செய்யப்பட்டதை அடுத்து நேர்வா ரோமப் பேரரசன் ஆனான்.

★ 1502-கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவதும் கடைசியுமான கடற்பயணத்தின் போது கொஸ்டாரிக்காவில் தரையிறங்கினார்.

★ 1809-லண்டனில் ரோயல் ஒப்பரா மாளிகை திறக்கப்பட்டது.

★ 1810-சிலியில் முதலாவது அரசு அமைக்கப்பட்டது.

★ 1851-நியூயோர்க் டைம்ஸ் இதழ் முதன்முதலில் வெளியிடப்பட்டது.

★ 1895-புக்கர் டி. வோஷிங்டன் தனது புகழ்பெற்ற அட்லாண்டா மத்தியஸ்தம் என்ற சொற்பொழிவை ஆற்றினார்.

★ 1919-நெதர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★ 1922-உலக நாடுகள் அணியில் ஹங்கேரி இணைந்தது.

★ 1924-மகாத்மா காந்தி இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக 21 நாட்களில் உண்ணாநோன்பைத் தொடங்கினார்.

★ 1932-நடிகை பெக் எண்ட்விசில் ஹொலிவுட் சின்னத்தின் H எழுத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

★ 1934-சோவியத் ஒன்றியம் உலக நாடுகள் அணியில் இணைந்தது.

★ 1943-இரண்டாம் உலகப் போரில் பெலாரஸ் தலைநகர் மின்ஸ்க் நகரில் சொபொபோர் என்ற இடத்தில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1959-வன்கார்ட் 3 பூமியைச் சுற்றிவர அனுப்பப்பட்டது.

★ 1962-ருவாண்டா, புரண்டி, ஜமெய்க்கா ஆகியன ஐ.நா.வில் இணைந்தன.

★ 1968-இந்திய உளவுத்துறை நிறுவனம் றோ அமைப்பு உருவாக்கப்பட்டது.

★ 1972-இடி அமீனினால் விரட்டப்பட்ட முதல் தொகுதி உகண்டா மக்கள் ஐக்கிய இராச்சியத்தை வந்தடைந்தனர்.

★ 1977-வொயேஜர் 1 பூமியையும் சந்திரனையும் சேர்த்துப் படம் எடுத்தது.

★ 1980-சோயுஸ் 38 கியூபாவைச் சேர்ந்த விண்வெளி வீரருடனும் ஒரு ரஷ்யருடனும் விண்வெளி சென்றது.

★ 1990-லிக்டன்ஸ்டைன் நாடு ஐ.நா.வில் இணைந்தது.

★ 2007-மியன்மாரில் பௌத்த பிக்குகள் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

### பிறப்புக்கள்

★ 1709-சாமுவேல் ஜோன்சன், ஆங்கில எழுத்தாளர் (இ.1784)

★ 1819-லியோன் ஃபோக்கோ, பிரெஞ்சு இயற்பியலாளர் (இ.1868)

★ 1979-வினய், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

### இறப்புக்கள்

★ 1783-லியோனார்டு ஆய்லர், சுவிற்சர்லாந்து கணிதவியல் அறிஞர் (பி.1707)

★ 1961-டாக் ஹமாஷெல்ட், சுவீடனைச் சேர்ந்த ஐ.நா. பொதுச் செயலர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1905)

★ 1966-வித்துவான் க.வேந்தனார், ஈழத் தமிழறிஞர் (பி.1918)

### சிறப்பு தினம்

★ சிலி- சுதந்திரதினம் (1810)



★ 1978-பகுத்தறிவாளர் ஆபிரகாம் கோவூரின் நினைவு தினம் இன்றாகும். (பி.1898)

# கற்பிட்டி பிரதேசத்தில் சட்டவிரோத முறையில் காணிகள் அபகரிப்பு



## தயாசிறி ஜெயசேகர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கற்பிட்டி பிரதேசத்தில் பெறுமதிவாய்ந்த காணிகள் சட்ட விரோதமான முறையில் கைப்பற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் பின்புலத்துடன் கூடிய நபர்கள் இவ்வாறு காணிகளை கைப்பற்றி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சுற்றுலாக் கைத்தொழிலை மேற்கொள்ளக்கூடிய மிகவும் பெறுமதியான 165 ஏக்கர் அரச காணி இவ்வாறு தனியாரினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கர் மூன்று மில்லியன் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் பதிவாகியுள்ளன. இந்த விடயம் குறித்து ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர சுட்டிக்காட்டியபோது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்புடன் தொடர்புடையவர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, சட்டவிரோதமான முறையில் காணிகள் கைப்பற்றப்படுவதனை தடுப்பதற்கு காணி அமைச்சிற்கு போதிய அதிகாரங்கள் கிடையாது என சிரேஷ்ட அதிகாரியொருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக காணி அபகரிப்பு தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பிரதேச செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். இதேவேளை, காணி அபகரிப்பு தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4-2)

# டி.ஆர்.சி.நிறுவனம் 48 பேருக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கியுள்ளது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பிரதேசத்துக்குட்பட்ட 48 குடும்பங்களுக்கு டி.ஆர்.சி.நிறுவனத்தால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,மேற்குறிப்பிட்ட பிரதேச மக்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டது.

இத் துவிச்சக்கரவண்டிகள் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும் பெண்களை தலைமையாகக் கொண்ட பொருளாதாரத்தில் பின்னடைவுள்ள குடும்பங்களுக்குமே வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் டி.ஆர்.சி.நிறுவனத்தினர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் என தெரிவித்தார். (4-3)

# இலங்கையை பிச்சைக்கார நாடாக் மாற்ற சில அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர்



## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையைப் பிச்சைக்கார நாடாக மாற்றுவதற்கு சில அரசியல்வாதிகள் முயற்சி செய்து வருவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தரம்குறைந்த பெற்றோல், தரம்குறைந்த சீமெந்து போன்றவற்றை இறக்குமதி செய்து இந்த நாட்டு மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகளின் பின்னணியில் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர்.

இந்த விடயங்களை மக்கள் புரிந்து கொள்ளத் தவறினால் எதிர்காலத்தில் இலங்கை வறிய நாடாக மாற்றமடையும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சுவாசப்பை பரிசோதனைக்காக தனியார் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த போது அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (4-2)

# அரசாங்க துறைகளில் மோசடி குறித்து தினமும் 25 முறைப்பாடுகள்

## ஜகத் பாலபட்டபெந்தி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க துறைகளில் இடம்பெறும் பல்வேறு ஊழல் மோசடிகள் குறித்து தினமும் சுமார் 25 முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான ஜகத் பாலபட்டபெந்தி தெரி-வித்துள்ளார்.

கிடைக்கும் முறைப்பாடுகளின் அடிப்படையில் தேடுதல்கள் நடத்தப்படுகின்றன என தெரிவித்த அவர் பணத்தை வட்டிக்கு கொடுத்தல் போன்ற இலஞ்ச சட்டத்திற்கு உட்படாத விடயங்கள் குறித்தும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழு இயங்காது இருந்த காலத்தில் செய்யப்பட்ட 3 ஆயிரத்து 700 முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் ஆணைக்குழு. மீண்டும் இயங்க ஆரம்பித்த கடந்த மே மாதம் 15 ஆம் திகதி முதல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பாலபட்டபெந்தி குறிப்பிட்டுள்ளார். இலஞ்ச ஆணைக்குழுவை 1954 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு முறைப்பாடுகளை செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# சிரேஷ்ட புலி உறுப்பினர்கள் 880 பேருக்கு எதிராக வழக்கு

## திவயின தகவல்

(கொழும்பு)

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 880 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடுமையான குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 880 சிரேஷ்ட விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராக இவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுதலை செய்யுமாறு சர்வதேச நாடுகள் அழுத்தங்களை பிரயோகித்த போதிலும் அதற்கு செவிசாய்க்கப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 270 சிரேஷ்ட விடுதலைப்புலிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய பயங்கரவாதத் தடைப் பிரிவினர் புலி உறுப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளனர். (4-2)

# நாட்டில் தூக்குத் தண்டனை கொண்டுவரப்பட வேண்டும்

## கருத்துக்கணிப்பில் தகவல்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் காணப்படும் குறைப்பாடுகள் தொடர்பாக மக்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் நூற்றுக்கு 80 வீதமானவர்கள் மீண்டும் தூக்கு தண்டனை கொண்டுவரப்பட வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பீ.டபிள்யூ.கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார்.

மொனராகலையில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போதே மக்களிடம் இந்த கருத்து கணிப்பு நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது நாட்டில் நடைபெறும் பல்வேறு குற்றச் செயல்கள் காரணமாக தூக்கு தண்டனை இருக்க வேண்டும் என மக்கள் கூறியுள்ளனர்.

அதேவேளை, மரண தண்டனை விதிக்கப்பட்ட 357 கைதிகள் உள்ளனர். இவர்கள் வெலிகடை, போகம்பரை மற்றும் மெகசீன் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். (4-2)

# இரத்ததான நிகழ்வு

சத்தியசாயி சர்வதேச இரத்ததான தினத்தையொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள சத்தியசாயி நிலையத்திலும் பிற்பகல் 2 மணிக்கு மந்திகை வைத்தியசாலையிலுள்ள இரத்த வங்கியிலும் இரத்ததான நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

எனவே, இரத்ததானம் செய்ய விரும்புபவர் மேற்படி இடங்களுக்குச் சென்று இரத்ததானம் செய்யலாமென வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவன சேவை அமைப்பாளர் அறிவித்துள்ளார். (4-12)

# மரண அறிவித்தல்

## முருகேசு சிவப்பிரகாசம்



(ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் யா.ப.நோ.கூ.சங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியர் யாழ்.இந்துக் கல்லூரி, கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட மன்றலாடும் விநாயகர் ஆலய முன்னாள் பொருளாளரும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினரும், கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய பொருளாளரும்.)

அளவெட்டி வடக்கு சாத்தாகலட்டியை பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை சுவாமியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவப்பிரகாசம் அவர்கள் 15.09.2011 வியாழக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வனும், நாகேஸ்வரி (கருணா) அவர்களின் பாசமிகு கணவரும், சத்தியா, கோதை (லண்டன்), பிரணவன் (Kevilton Electrical Product (PVT) Ltd) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன் (பிரான்ஸ்) இராதேயன் (Doctor London), வர்ஷினி (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிருதுலா, மானசா, ஆதிரை ஆகியோரின் அருமைப் பேரனும், நகுலாம்பிகை கந்தரட்ணம்,திலகவதி, சதாசிவம் ஆகியோரின் சகோதரனும், விஜயலட்சுமி பரமானந்தம் அவர்களின் மைத்துனரும், சுலோசனா, பிரபாகரன் ஆகியோரின் சிறிய தந்தையும், கௌரி, ராகவன், அழகேசன், சஞ்சயன், சான்றோன், சாதுரியன், சாயீசன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

20/3 சுவாமியார் ஒழுங்கை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்
மகன் : சி.பிரணவன்
(0773604486)

(6159)

# ஐ.நா.வின் மீளாய்வு நடவடிக்கையின் பின்னர் பிடியாணை பிறப்பிக்கப்படும்

## அமைச்சர் விமல் வீரவன்ச ஆவேசம்

(கொழும்பு)

**இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கை யில் ஐ.நா.வின் பணிகள் குறித்து விசாரிப் பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தொரயா ஒபேட் டின் அறிக்கை வெளிவந்ததும் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் முக்கிய பாது காப்பு அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்படும் நிலைமை ஏற்படும் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

பத்தரமுல்லயில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

லிபியாவில் இடம்பெற்றதைப் போன்ற தொரு நடவடிக்கையை இலங்கையில் மேற்கொள்ளவே சர்வதேச சமூகம் முயற்சிக்கின்றது. இவ்வாறான முயற்சிகளின் ஒரு கட்டமாகவே அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் றொபட் ஓ பிளேக்கின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது.

எனவே லிபியாவை போன்று இலங்கையை மாற்றியமைக்கும் சர்வதேச சமூகத்தின் சதி முயற்சியை தோற்கடிக்க தேசிய மட்டத்தில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் என அனைத்து தரப்பினரும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற இறுதிக் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்கான முறையில் செயற்படவில்லை என்று தாருஸ்மான் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளரான தொரயா ஒபேட் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீமூன் இந்த நியமனத்தை உத்தியோகபூர்வமான முறையிலேயே மேற்கொண்டுள்ளார்.

ஆரம்பத்தில் தாருஸ்மான் குழுவை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நியமித்த போது இலங்கை மற்றும் எமக்கு ஆதரவான நாடுகள் எதிர்ப்பு வெளியிட்டன. அப்போது குறித்த குழுவானது தனக்கு ஆலோசனை வழங்க மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளதாக பான்கீ மூன் தெரிவித்திருந்தார்.

ஆனால் தாருஸ்மான் குழுவின் அறிக்கை யானது இன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவைக்கு சென்றுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் பணிகள் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தொரயா ஒபேட் இன்னும் மூன்று மாத காலத்தில் தனது விசாரணை அறிக்கையை தயாரிப்பார். அதற்கு உள்நாட்டிலும் ஒரு சிலரிடம் உதவிகளை பெற்றுக்கொள்வார்.

அந்த அறிக்கையின் இறுதிப் பந்தியில் இடம்பெறும் விடயம் தற்போது தீர்மானிக்கப்பட்டிருக்கும். அதாவது இறுதிக் கட்ட யுத்தத்தின் போது போர்க் குற்றங்கள் இடம்பெற்றன என்றும் அதனை தடுக்க ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையங்களினால் எதனையும் செய்ய முடியாத நிலை காணப்பட்டதாகவும் இறுதிப் பந்தியில் குறிப்பிடப்படும். அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையங்கள் எதனையும் செய்ய முடியாத அப்பாவி நிலையாக இருந்ததாக குறிப்பிடப்படும். இந்நிலையில் குறித்த விசாரணை அதிகா ரியின் அறிக்கையானது தாருஸ்மான் அறிக்கை போலன்றி உத்தியோகபூர் வமானதாக அமையும். இந்நிலையில் தொரயா ஒபேட்டின் அறிக்கை வெளிவந்ததும் அதனை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடை பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடருக்கு சமர்ப்பிப்பார்கள்.

மனித உரிமை பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதும் அங்கு அந்த அறிக்கை ஆராயப்படும். அதன்போது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அந்த அறிக்கைக்கு அங்கீகாரத்தை வழங்கும். அதன் பின்னர் இது தொடர்பான விடயம் சர்வதேச யுத்தக்குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லப்படும்.

இறுதியில் சர்வதேச சமூகத்தின் சூழ்ச்சியின் இறுதிக்கட்ட அரங்கேற்றமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர்



கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முக்கிய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்படும் நிலைமை ஏற்படும். இதற்கான சதி முயற்சியிலேயே சர்வதேச சமூகம் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில் இவ்வாறான முயற்சிகளின் ஒரு கட்டமாகவே அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் றொபேட் ஓ பிளேக்கின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார். (4-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழுவின் கலந்துரையாடலொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரியகுளம் முன்பாகவுள்ள உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சமகால அரசியல் எனும் விடயம் பற்றி கலந்துரையாடல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-12)


உ

# விருஷோத்ஸர்ஜனம்

(11 ஆம் நாள் அபரக்கிரிஜை)

சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகன் வீதியைச் சேர்ந்த

*அமரர் ஸ்ரீமதி சத்தியபாமா சோமசுந்தரக் குருக்கள் அவர்களின்*

வருஷாப்திக ஞாபகார்த்த

## நூல் வெளியீட்டு விழா

*காலம் :- 18.09.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணி*
*இடம் :- நல்லூர் சிவன் தேவஸ்தான மண்டபம்*
*தலைவர்:- சிவஸ்ரீ அ.சற்குணராஜசர்மா (சர்மாஜி)*

01. மங்கள விளக்கேற்றல் :-
02. வேதபாராயணம் :-
03. தேவார பாராயணம் :-
04. வரவேற்புரை :- *சிவஸ்ரீ சோம பாலச்சந்திரக் குருக்கள்* (மாணிக்க விநாயகர் தேவஸ்தானம் பம்பலப்பிட்டி கொழும்பு)
05. ஆசியுரை :- *சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள்* (விநாயகர் தேவஸ்தானம்- அத்தியடி-யாழ்ப்பாணம்)
06. வாழ்த்துரை வழங்குபவர்கள்:-

*கலாநிதி. சிவஸ்ரீ ஐயப்ப தாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்* (சர்வதேச இந்துமத குருபீடம்)

*சிவஸ்ரீ சு.பரமேஸ்வர மனோகரக்குருக்கள்* ( வல்வை சிவன் தேவஸ்தானம்)

*சிவஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா* (சிவன் தேவஸ்தானம்-நல்லூர்)

தலைமையுரை :-

நூல் வெளியீட்டுரை :- *சிவஸ்ரீ தா.மகாதேவ குருக்கள்* (காயத்திரி பீடம்-இணுவில்)

நூல் அறிமுகவுரை :- *பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா* (B.A சர்வானந்த மயபீடம்-இணுவில்) (கோப்பாய்-சிவம்)

நூல் வெளியீடு :-

நன்றியுரை :- *சிவஸ்ரீ சோம. கேதீஸ்வரசர்மா*

இந்நூல் வெளியீட்டு விழாவில் அந்தணப் பெருந்தகைகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சிவஸ்ரீ. சிவானந்த சோமசுந்தரக் குருக்கள்**
**குடும்பத்தினர்,**
**முருகமூர்த்தி வீதி, சங்கானை.**

(6166)


# நாட்டில் ஜனநாயகம் என்பது முற்றாக வலுவிழந்துள்ளது

## தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உணவு வழங்கி மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். எனினும் நாட்டில் ஜனநாயகம் முற்றுமுழுதாக வலு விழந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாள்தோறும் எமது காணிகள் வெளி நாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளார். சந்தையில் சகல பொருட்களிலும் கலப்படம் செய்யப்படுவதாகவும் தரமான பொருட்களை கொள்வனவு செய்ய முடிவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(4-2)




மல்லாகம் தெல்லிப்பழை அரிமா லயன்ஸ் கழகத்தினரால் மல்லாகம் சகாய மாத கோவில் வளாகத்தில் வைத்து அண்மையில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் அரிமா லயன்ஸ் கழக உறுப்பினர் ஒருவர் இரத்ததானம் வழங்குவதையும் அருகில் இக் கழகத்தலைவர் உட்பட மற்றும் உறுப்பினர்களும் வைத்தியரும் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

## வாடிக்கையாளர் சேவை நிலையம்

இப்போது கிழமையின் ஏழு நாட்களிலும்
இருபத்தி நான்கு மணி நேர 24/7
சேவையுடன்

## கட்டணமின்றிய அழைப்பிலக்க வசதி



மீள் வடிவமைக்கப்பட்ட புதிய தொழில்நுட்பத்துடன் கிழமையின் 7 நாட்களிலும் 24 மணி நேர சேவையை வழங்கும் எமது வாடிக்கையாளர் சேவை நிலையம் இப்போது கட்டணமின்றிய அழைப்பினை ஏற்படுத்துவதற்கான வசதியினை உங்களுக்கு வழங்குகின்றது.

உங்களது பணத்தையும் காலத்தையும் மீதப்படுத்திக்காண்டு உங்களது சகலவிதமான காப்புறுதிப் பிரச்சினைகளுக்கும் தெளிவான தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நாம் தயார்.

0112
0115
0117
0114
**357357**

கட்டணமின்றிய அழைப்பு வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கு மேலுள்ள ஏதாவதொரு நிலையான தொலபேசியினூடாக உங்கள் வலையமைப்பின் குறியீட்டு இலக்கத்துடன் 357357 க்கு அழையுங்கள்.

ஸ்ரீ லங்கா இன்ஷவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

ஆறாத மரத்தை வேலைக்கு அதிகமாக உபயோகிக்கக் கூடாது. அதுபோலத்தான் பண்படாத அறிவும். –ஹோம்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யானைக்குத் தந்தம் அதற்கு வினைபோல எங்களுக்கு நாங்களே வினை

உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்று ஒளவைப்பிராட்டி கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

எங்கள் பிறப்போடு எங்களுக்கான அந்தமும் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றது.

இதற்கு யானையினம் நல்லசான்று. மிகவும் முதுமையான யானைகளின் மரணம் அதன் தந்தத்தினாலேயே ஏற்பட்டு விடுகின்றது. இதைநாம் கூறும்போது, யானையைக் கொன்று தந்தத்தை எடுப்பது என்று எவரும் நினைத்து விடாதீர்கள்.

மாறாக யானை முதுமையடைய அதன் தந்தமும் வளர்ச்சியடையும். அவ்வாறு வளர்ச்சியடைகின்ற தந்தம் நேராக வளர்வது கிடையாது. ஒன்றை ஒன்று குறுக்கிடுவதாக வளரும். இவ்வாறு இரண்டு தந்தமும் ஒன்றை ஒன்று குறுக்கிடுவதன் காரணமாக யானை தன் துதிக்கையை உயர்த்த முடியாமல் பெரும் அவஸ்தைப்படும்.

நிலத்தில் கிடக்கின்ற பழவகை, இலைவகை தவிர உயரத்தில் உள்ள எதனையும் யானை தனக்கு ஆகாரமாக்க முடியாது.

ஆக, யானை பட்டினி கிடந்து உடல் மெலிந்து தேகவியோகம் அடையும்.

என்ன செய்வது? யானைக்குப் பெறுமதியைக்கொடுத்த தந்தமே அதன் அந்திமத்திற்கும் காரணமாகியது.

யானையின் தந்தத்திற்கு நாம் எவ்வளவு தான் மதிப்பளித்தாலும் அதன் மறுபக்கம் வேதனையாக இருப்பது வேறு விடயம்.

இப்படி உடன் பிறந்து கொல்லும் கொடுமைக்குப் பலவற்றைக் காட்டலாம். அதில் ஈழத் தமிழினமும் ஒன்று. தமிழர்கள் எவ்வளவோ தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றை தங்கள் உரிமைக்காக செய்திருந்தாலும், கூடவே இருந்த தந்தங்கள் தமிழினத்துக்கு கெடுதி இழைத்து விட்டன.

இப்போது கூட அரசு–தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சுவார்த்தை என்பது எங்களை ஏமாற்றுவதற்கான நாடகமே.

பதின்மூன்றாவது திருத்தச்சட்ட மூலத்திற்கு அப்பால் சென்று தீர்வுகாணப்படும் என்பது சர்வசாதாரணமாகக் கூறப்படுகின்றது.

ஆ! கடவுளே! மர்ம மனித விவகாரம், மீள்குடியேற்றப் படலம், காணாமல் போனவர்களின் துயரம், சிறைகளில் வாடும் துன்பம் என எதற்குமே வழிகாணப்படாத நிலையில், பதின்மூன்றாவது திருத்தச்சட்ட மூலத்திற்கு அப்பால் சென்று தீர்வு காண அரசும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் உடன்பாடு என்பது நம்பமுடியாத விடயமே.

என்ன செய்வது? யானை தன் தந்தத்தினால் தனக்கு ஏற்படப்போகும் ஆபத்தை உணராதது போலவே, நாமும் எங்களுக்குள் இருக்கின்ற தந்தங்களால் ஏற்படப்போகும் ஆபத்தை உணராதவர்களாக இருக்கிறோம்.

இறைவா! எங்களை நீ இரட்சிப்பாயாக.

# போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்தியா இலங்கையை காப்பாற்ற வேண்டும்

## நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்கா இலங்கையில் மீண்டும் இனங்களுக்கு இடையே பிளவுகளை ஏற்படுத்தி நாட்டில் அமைதியின்மையை உருவாக்க முயற்சிக்கின்றது. எனவே நாட்டின் சுயாதீன தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் நடந்து கொள்வதை அனுமதிக்க முடியாது என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும் ஊடக செயலாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க கூறுகையில்,

வடக்கில் ஆயுதக் குழுக்கள் செயற்படுவதாகவும் அங்கு தமிழ் பொலிஸாரை ஈடுபடுத்துமாறு தெற்காசியவிற்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் ரொபேட் ஓ பிளேக் தெரிவித்திருந்தார்.

இதனை ஜாதிக ஹெல உறுமய மிகவும் வன்மையாக கண்டிக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கும் தவறான தகவல்களினாலேயே மேற்படி பிரச்சினைகளும் குற்றச்சாட்டுக்களும் வெளிப்படுகின்றன.

அமெரிக்காவிற்கு இலங்கை தொடர்பாக ஒன்றுமே தெரியாது.போலிக்குற்றச்சாட்டுக்களை சுமத்தி நாட்டில் பிளவுகளை ஏற்படுத்துவதே நோக்கமாக உள்ளது. எவ்வாறாயினும் வடக்கு உட்பட நாட்டில் எப்பிரதேசத்திலும் இராணுவம், பொலிஸாரை தவிர வேறு எந்த ஆயுதக்குழுக்களும் இல்லை.

இன்று சர்வதேசம் இலங்கையை போர்க்குற்றச்சாட்டு பொறிக்குள் சிக்க வைக்க முயற்சிக்கின்றது. போலிக் குற்றச்சாட்டுக்களின் ஊடாக நாட்டை அபகீர்த்திக்குள் உள்ளாக்க முயற்சிக்கின்றது.

இதேவேளை சர்வதேசத்தின் போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளில் இருந்து இலங்கையை காப்பாற்ற வேண்டிய கடப்பாடு இந்தியாவிற்குள்ளது.

இந்த விடயத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவாக செயற்படும் என்ற நம்பிக்கை உள்ளது. அயல் நாடு என்ற வகையிலும் நீண்ட கால உறவு என்ற ரீதியிலும் இந்தியாவின் நிலைப்பாடு முக்கியமானதாகவே அமைகின்றது.

சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு இந்தியா தனது நோக்கங்களை சாதித்துக் கொள்ள நினைத்தால். இதற்கு இடமளிக்கப் போவதில்லை உள் நோக்கங்களுடன் செயற்பட்டு நாட்டிற்கு எதிராக தீர்மாணங்களுக்கு துணை போனால் இந்தியாவுடனான எதிர்கால உறவுகள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எடுக்க நேரிடும் என்றார். (4-2)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

**யா/உடுத்துறை மகா வித்தியாலயம்**

சி.சரணியா-176,இ.நிறைமதி-157, க.விதுஷா-151

**யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**

ஜீ.அபிராமி-164,பி.கயூரி-162, சி.ஜிந்துஜா-161,க.பிரணவன்-158, தே.யாதவன்-156

**யா/வண்.ஸ்ரீவைத்தியலிங்கம் வித்தியாலயம்**

பி.பிறின்சிகா-161, கி.ஜனார்த்தன்-154. (4)

# மரணதண்டனையை நீக்கக் கோரி மாநிலம் தழுவிய பிரசாரப் போர்

மரணதண்டனைக்கு எதிராக பெரியார் திராவிட கழகம் சார்பில் மாநிலம் தழுவிய பிரசாரம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. அக்கட்சியின் தலைவர் கொளத்தூர் மணி தெரிவித்துள்ளார்.

உலகில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகளில் மரணதண்டனை ஒழிக்கப்பட்டு விட்ட நிலையில் மரணதண்டனைக்கு எதிராக தன் வாழ்நாளையே அர்ப்பணித்த மகாத்மாகாந்தி வாழ்ந்த இந்த நாட்டில் இன்னமும் மரணதண்டனை இருந்து வருகிறது.

இந்தியாவில் மரண தண்டனையை நீக்கக் கோரியும் மூன்று தமிழர்களின் உயிர்களைக் காக்கும் வகையில் அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையைக் குறைக்க கோரியும் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நாளை மறுதினம் மாநிலம் தழுவிய பிரசாரம் சென்னையில் ஆரம்பமாகிறது.

இந்த விழாவில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ கலந்து கொள்ளவுள்ளார்.

நாளைமறுதினம் செவ்வாய்கிழமை தொடங்கும் பிரசாரம் ஒக்டோபர் 31ஆம் திகதி திங்கட்கிழமை வேலூரில் முடிவடைகிறது. பிரசாரப் பயணத்தில் பல்வேறு கட்சித்தலைவர்கள் பல்வேறு இடங்களில் கலந்து கொண்டு பேசுகிறார்கள்.

இந்தப் பிரசார பயணத்தை என்னுடன் பொதுச் செயலாளர் விடுதலை ராஜேந்திரன், கோவைராமகிருஷ்ண் ஆகியோர்ஒருங்கிணைந்து செயற்ளபடுவார்கள். (4-2)

# முதன்மையை அல்ல, முழுமையை தேடுவோம் இறையரசில் ஒன்றிணைவோம் [மத் 20:1-16]

## பரமபிதா காட்டிய பாதை

நாங்கள் ஆதிகாலத்து கிறிஸ்தவர்கள். நாங்கள் தான் ஆலயத்திற்கு முன்னால் நின்று எல்லாம் செய்வோம். நேற்று வந்தவர்கள் எல்லாம் தலை தூக்கக்கூடாது. இது நம் பங்குகளில், நாம் பங்குத்தந்தையர்கள் சந்திக்கின்ற ஒரு அனுபவமாகும். ஆதியிலிருந்து எங்களுக்குத்தான் முதல் உரிமை. புது கிறிஸ்தவர்கள், புதுமுகங்கள் உரிமைகொண்டாட முடியாது. பங்குத் தந்தையர்களுக்கு என்ன தெரியும். அவர்கள் வந்து போகிறார்கள்தானே போன்ற பல தளர்ச்சியூட்டிய விமர்சனங்கள், வீண் பேச்சுக்கள் செயல்கள் பங்கின் முன்னேற்றத்தின் அடையாளம் அல்ல. இந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள். உன் எண்ணங்கள் என் எண்ணங்கள் அல்ல. எனக்கு அனைவரும் சமம். அனைவருக்கும் முழு உரிமையுண்டு என இன்றைய வாசகங்கள் வழியாக இறைவன் அழைப்பு விடுக்கின்றார்.

முதல் வாசகத்தில் எருசலேம் ஆலயம் அடியோடு அழிக்கப்பட்டிருந்த பொழுது இஸ்ரயேல் மக்கள் பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பெற்று, எருசலேமைநோக்கி செல்லும் போது தயங்குகிறார்கள். தந்த உரிமையை இறைவன் எடுத்துவிட்டார் என்று அவர்கள் எண்ணியபொழுது, ஏசாயா இறைவாக்கினர் வழியாக, இறைவன் என் எண்ணங்கள் உங்களிடமிருந்து வேறுபட்டவை, உங்கள் அருகாமையில் நான் இருக்கின்றேன். முழு உரிமையை மீண்டும் நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள் என அழைப்பு விடுக்கின்றார். இரண்டாம் வாசகத்தில் கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளுங்கள் என கூறுகின்றார்.

நீதி என்றால் என்ன என தேட நற்செய்தி வாசகம் அழைக்கிறது. ஒருவருக்குரியதை அவருக்கு வழங்குவதுதான் நீதி. நீதி மனிதரின் பார்வையில் ஒன்றாகவிருக்க பக்கம் நாம் திரும்ப வேண்டும் என்பதை இன்றைய உவமை சுட்டிக்காட்டுகிறது. அனைவரும் நேர்மையாக உழைப்பதற்கு முதல் பணியில் சேர்ந்து அதிக நேரம் உழைத்தவர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்க தாமதமாக வந்து, குறைந்த நேரம் உழைத்தவர்கள் குறைந்த ஊதியம் கிடைப்பதுதான் மனித நீதியின்படி சரியாகும். ஆனால், கடவுளின் -பார்வை அப்படியல்ல. முதலில் வந்தாலும் சரி, கடைசியில் வந்தாலும் சரி எல்லோருக்கும் சம உரிமையே என்பதே கடவுளின் நீதி.

தோட்ட உரிமையாளர்:- இறைவன் இயேசு. முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டு உரிய ஊதியத்தை பெற்றோர். இஸ்ராயேல்மக்கள்-யூதகிறிஸ்தவர்கள். இறுதியில் வந்து அதே ஊதியத்தை பெற்றவர்; புறஇனக்கிறிஸ்தவர்கள். ஊதியம்; இறைவன் தேர்ந்தெடுத்துக் கொடுக்கின்ற கொடையாகிய இறையரசின் முழு உரிமம்.

எந்த நேரத்திலும் வந்தாலும் இறைவன் இறையரசின் முழு உரிமையை உறுதியளிக்கின்றார். இறைவனின் இந்த கொடையை யாரும் தடுக்க முடியாது, ஆனால் எனக்குத்தான் முதல் உரிமை, நாங்கள் முதல் கிறிஸ்தவர்கள் என பெருமிதமான பொறாமை மனப்பான்மை கொண்டவர்களால்பங்குகளின் வளர்சி தடைப்பட்டிருப்பது கண்



கூடு. எம் குடும்பங்களின் தளர்ச்சிக்கும் பங்குகளின் தளர்ச்சிக்கும் இத்தகையோரே காரணம். மனமாறி வருபவர்கள் எவராகயிருந்தாலும் எத்தனை ஆண்டுகள் இறைவனை மறந்து வாழ்ந்து இறுதி மரணப்படுக்கையில் இறையரசைத் தேடிவந்தாலும் அவர்களையும் நீயும் அபிரகாமின் மகனே என சக்கேயுவை அழைத்ததுபோல காணாமற்போய் கிடைத்த ஊதாரிமைந்தனை நீ என் மகன் என அழைத்தது போல், அழைத்து இறைவன் முழு உரிமை அளித்து இறையரசில் பங்காளிகளாக்குகிறார். தாராள உள்ளத்தோடு பிறருக்கு நன்மை செய்கிறாரே என நினைத்து நாம் பொறாமைப்படுவதும் முறையாகாது.

ம. பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.

# நரேந்திரமோடியின் உண்ணா நோன்பிற்கு அரங்கம் நிரம்பிய கட்சித் தொண்டர்கள்



(ஆமதாபாத்)

குஜராத்தில் நடந்த கலவர வழக்கில் முதல் மந்திரி நரேந்திரமோடியை சேர்க்க உத்தரவிட முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு கூறியது. இந்த தீர்ப்பை வரவேற்கும் வகையில் மத நல்லிணக்கம், அமைதி ஒற்றுமையை வலியுறுத்தி 3 நாட்கள் உண்ணாவிரதம் இருக் கப்போவதாக நரேந்திரமோடி அறிவித்தார்.

அதன்படி தனது பிறந்த நாளான நேற்று காலை 10 மணிக்கு நரேந்திர மோடி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

ஆமதாபாத்தில் உள்ள குஜராத் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மண்டபத்தில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார். உண்ணாவிரத தொடக்க நிகழ்ச்சியில் பாரதீய ஜனதா மூத்த தலைவர்கள் அத்வானி உட்பட பாரதீய ஜனதா முதல் மந்திரிகள் கலந்து கொண்டனர்.

பாரதீய ஜனதா கூட்டணி கட்சியான அகாலி தளம் தலைவர் பிரகாஷ் சிங் பாதல், சிவசேனா பிரநிதிகள் பங்கேற்றனர். நரேந்திரமோடி உண்ணாவிரதத்துக்கு அ.தி.மு.க. ஆதரவு தெரிவித்தது.

அதன்படி அவர்கள் இருவரும் நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்து உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

நரேந்திரமோடி உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து 10 ஆயிரம் முஸ்லிம்களும் கலந்து கொண்டனர். குஜராத் மாநிலத்தின் 5 மண்டலத்தில் இருந்தும் பாரதீய ஜனதா கட்சியின் சிறுபான்மை பிரிவு சார்பில் தலா 2 ஆயிரத்து 500 முஸ்லிம்கள் வீதம் உண்ணாவிரதத்துக்கு வந்து இருந்தனர். கட்சி தொண்டர்கள் அதிக அளவில் கலந்து கொண்டதால் அரங்கம் நிரம்பி வழிந்தது.

இதேவேளை நரேந்திரமோடி உண்ணாவிரதத்துக்கு போட்டியாக காங்கிரசாரும் எதிர் உண்ணாவிரதம் இருந்தனர். இதற்காக ஆமாதாபாத் காந்தி ஆசிரமத்தில் மேடை அமைக்கப்பட்டிருக்கிறது.

நரேந்திரமோடி உண்ணாவிரதத்தை தொடங்குவதற்கு முன்பாகவே காங்கிரசின் உண்ணாவிரதம் ஆரம்பமாகியது. மாநில காங்கிரஸ் தலைவர் சங்கர்சிங் வகேலா தலைமையில் ஏராளமான காங்கிரசார் கலந்து கொண்டனர். இவர்களும் 3 நாட்கள் உண்ணாவிரதம் இருப்போம் என்று அறிவித்துள்ளனர்.

சிறுபான்மையினரை கவர்வதற்காகவே நரேந்திரமோடி இந்த உண்ணாவிரத நாடகத்தை அரங்கேற்றி இருப்பதாக சங்கர்சிங் வகேலா குற்றம் சாட்டினார் என்றாலும் நரேந்திரமோடி உண்ணாவிரதத்தின் முன் கங்கிரஸ் உண்ணாவிரதம் எடுபடவில்லை. (4-2)

# ஜெனீவாவில் ஒபாமா, மன்மோகன் சந்திப்பு இல்லை

(வோஷிங்டன்)

பிரதமர் மன்மோகன்சிங்கின் அமெரிக்கப் பயணத்தின் போது அந்நாட்டு ஜனாதிபதி ஒபா மாவை சந்திக்கும் நிகழ்ச்சி இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. பொது சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக மன் மோகன் சிங் அடுத்த வாரத்தில் நியூயோர்க் செல்லஇருக்கிறார். இதனால் அவர் ஒபாமாவைச் சந்திப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி இல்லமான வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அரசு அதிகாரி பென் ரோடிஸ், இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கும் ஒபாமாவும் சந்தித்துப் பேசுவதற்கு இதுவரை ஏற்பாடுகள் ஏதும் செய்யப்படவில்லை. ஆப்கானிஸ்தான், லிபியா, பிரேசில்,பிரிட்டன், பிரான்ஸ்,ஜப்பான், சூடான் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை ஐ.நா. கூட்டத்தின் போது ஒபாமா சந்தித்துப் பேசுகிறார் என்றார் அவர். (4-2)

# டில்லியில் பலத்தமழை; இயல்புநிலை பாதிப்பு



(புதுடில்லி)

டில்லியில் நேற்று முன்தினம் காலை பெய்த பலத்த மழையால் நகரின் பல பகுதிகளில் வீதிகளில் நீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் காலையில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

டில்லியில் நேற்று முன்தினம் விடியற்காலை முதல் பலத்த மழை பெய்தது. நேற்று முன்தினம் காலை8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் டில்லியில் 34.6மி.மீ மழை பெய்தது. நகரின் முக்கிய பகுதிகளான லட்சுமி நகர், மொடல் டவுன், பிரீத் விகார், ஆர்.கே.புரம், ஜானக்புரி உள்ளிட்ட பல பகுதிகளில் வீதிகளில் மழைநீர் தேங்கியது.

இதனால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாமலும் பணிக்கு செல்ல முடியாமலும் அவதி அடைந்தனர். வீதியில் இருந்த வாகனங்கள் மேற்கொண்டு செல்ல முடியாமல் நின்றன. பல வாகன சாரதிகள் தங்கள் வாகனங்களை ஓரங்கட்டி விட்டுஅருகில் இருந்த மெட்ரோ புகையிரத நிலையங்கள் சென்று புகையிரதம் மூலம் தங்கள் பணியிடங்களுக்கு சென்றனர். பலத்த மழையின் காரணமாக டில்லியில் தென் பகுதியில் உள்ள மெஹ்ரம் நகரில் இருந்து இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு செல்லும் வீதி மூடப்பட்டது.

கிழக்கு டில்லியில் உள்ள பட்பார்ஹன்ஜ், காசிபூர் மேம்பாலம்,ஜகாங்கீர் பூர், வடடில்லியில் உள்ள திஸ்ஹசாரி ஆகிய வீதிகளில் நீர் தேங்கியதால் வாகனங்கள் ஊர்ந்து சென்றன. மேலும் மந்தவாளி, பில்மிஸ்டன், திமர்பூர், வாசிராபாத், மால்சாலை, சாந்திவனசவுக், கிரேட்டர் கைலாஷ்-1, ஜே.எல். என் வீதி, பதபூர் மேம்பாலம், நிகாம் போத் காட் ஆகிய பகுதிகளிலும் வீதிகளில் நீர் தேங்கியதால் அப் பகுதி மக்கள் அவதி அடைந்தனர். (4-2)

# கனிமொழியின் பிணை மனுவை —நீதிமன்றம் ஒத்திவைப்பு—



2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது டில்லி சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த 15 ஆம் திகதி குற்றச்சாட்டு பதிவு செய்வதாக இருந்தது. ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு நடந்தபோது நிதியமைச்சராக இருந்த இப்போதைய உள்துறை அமைச்சர் சிதம்பரத்துக்கும் தொடர்பு உள்ளதாகவும் அவரையும் வழக்கில் சேர்க்க வேண்டும் என்றும் ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியம் சாமி மனு தாக்கல் செய்தார். இதைத் தொடர்ந்து குற்றச்சாட்டு பதிவை நீதிபதி ஓ.பி சைனி ஒத்திவைத்தார்.

இந்நிலையில் சிறப்பு நீதிமன்றத்தில் கனிமொழி நேற்று மீண்டும் ஜாமீன் மனு தாக்கல் செய்துள்ளார். ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தனக்கு தொடர்பு இல்லை என்று ஜாமீன் மனுவில் கூறப்பட்டுள்ளது. மனு மீதான விசாரணையை ஒக்டோபர் முதலாம் திகதிக்கு நீதிமன்றம் தள்ளி வைத்தது.

முன்னர் ஸ்பெக்ட்ரம் வழக்கில் ஜாமீன் கோரி டில்லி சிறப்பு நீதிமன்றத்தில் கனிமொழி மனு தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்பெக்ட்ரம் வழக்கில் கடந்த மே மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கனிமொழியின் ஜாமீன் மனுவை ஜூன் 20 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அப்போது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்ட பின் சிறப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் மனு தாக்கல் செய்யலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

இதற்கிடையே ஸ்வான் டெலிகாம் நிறுவனம், ரிலையன்ஸ் டெலிகாம் லிமிடெட்டின் துணை நிறுவனம் அல்ல என்று மத்திய சட்ட அமைச்சகம் தெரிவித்த கருத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் படி சி.பி.ஐ உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை நீதிபதி சைனி திகதி குறிப்பிடாமல் நேற்று ஒத்திவைத்தார். (4-2)

# டென்மார்க்கிற்கு முதற் பெண்பிரதமர் தெரிவு

ஹெல்லி தார்னிங் ஷ்மிட் டென்மார்க்கின் முதல் பெண் பிரதமராக பதவியேற்கவிருக்கிறார். அவரின் இடதுசாரி கூட்டணி தற்போதைய பிரதமர் லார்ஸ் ரோக்கேரஸ் முசனின் கூட்டணியைத் தோற்கடித்துள்ளது. டென்மார்க்கில் நேற்று முன்தினம் தேர்தல் நடந்தது.

இதில் ஹெல்லி தார்னிங் ஷ்மிட்டின் (46) டென்மார்க் சமூக ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றது. 4 கட்சிகள் கொண்ட இடதுசாரி கூட்டணி டென்மார்க் நாடாளுமன்றத்தில் உள்ள 179 இடங்களில் 89 இடங்களை கைப்பற்றியது. 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இடதுசாரிகள் வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.



நாங்கள் தவறு செய்ய மாட்டோம்இன்று புதிய சரித்திரத்தை எழுதியுள்ளோம் என்று ஷ்மிட் தெரிவித்தார். திருமதி ஷ்மிட் கடந்த 1966 ஆம் ஆண்டு பிறந்தார். கோபன்ஹேகன் பல்கலைக்கழத்தில் அரசியல் அறிவியல் பயின்றார். பின்னர் புருகஸில் உள்ள யூரோப்பியன் கல்லூரியில் படித்தார். டானிஷ் தொழிற் சங்கங்கள் கூட்டமைப்பின் ஆலோசகராக பணிபுரிந்தார். (4-2)

# மிக மோசமான நிலையில் உலக பொருளாதாரம்

# உலக வங்கி அறிவிப்பு

உலக பொருளாதாரம் அபாயகரமான நிலையில் இருப்பதாக உலகவங்கி தலைவர் ராபர்ட்ஜோலிக் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலிருந்து விடுபட அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் கடன் அதிகரித்துள்ளதால் அந்நாட்டு பொருளாதாரம் கவலைக்கிட மாகி உள்ளது. இதுபோல் ஐரோப்பிய நாடுகளில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நிலைமையை சமாளிப்பது குறித்து உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதியமைச்சின் பொருளாதார நிபுணர்கள் அடுத்த வாரம் கூடி விவாதிக்க உள்ள னர்.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

இல்லாவிட்டால் வளர்ந்த நாடுகளின் பாதிப்பு வளரும் நாடுகள் உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளுக்கும் நிதி நெருக்கடி மீண்டும் பரவி உலக பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் என உலக வங்கி தலைவர் ராபர்ட் தெரிவித்துள்ளார். (4-2)

# சந்தேகத்திற்கு இடமாக நின்றவரை படையினர் கைது செய்தனர்

## சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி கனகம்புளியடிச் சந்திக் கருகாமையில் உள்ள வடலிகள் நிறைந்த பற்றைக்குள் சந்தேகத்திற்கிடமான முறையில் மறைந்து நின்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக 11ஆவது படைப் பிரிவின் கேணல் கேமரத்தின தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றுக்காலை 7.00 மணியளவில் 11-வது படைப்பிரிவின் இராணுவத்தினர் 4 பேர் வழமை போன்று ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மேற்குறிப்பிட்ட பகுதியில் பற்றைக்குள் நிர்வாணமான முறையில் குறித்த நபர் ஒளிந்திருந்தார். இராணுவத்தினரைக் கண்டதும் அந்த நபர் ஓட முற்பட்டார். அச் சந்தர்ப்பத்திலேயே அவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை விசாரித்த போது அவர் சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்தவர் என்றும் அப் பகுதியால் வரும் பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்வதற்காகவே அவர் ஒளிந்திருந்ததாகவும் குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது தெரியவந்ததாக கேணல் ஹேமரத்தின தெரிவித்தார்.

இதேவேளை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர் சங்கத்தானையைச் சேர்ந்த இராமையா காண்டீபன் (வயது 28) எனவும் வேலைநிமித்தம் அப்பகுதிக்கு சென்றபோது இராணுவத்தினர் வேண்டுமென்றே அவர் மீது குற்றம்சாட்டி கைது செய்துள்ளனர் என அவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த நபர் விசாரணையின் பொருட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ந-6)

## ஜனாதிபதி...

அமெரிக்க அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க குடிவரவு மற்றும் தேசிய சட்டம் பிரிவு212 தனியொரு மனிதர் ஐக்கிய அமெரிக்காவுக்கு வெளியில் மனிதப் படுகொலைக்கு கட்டளையிட்டார், தூண்டினார், துணைபோனார் அல்லது வேறுவிதத்தில் ஈடுபட்டார் எனில் அவர் ஐக்கிய அமெரிக்காவுக்குள் நுழையத் தகுதியற்றவர் எனக் கூறுகிறது.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் தமிழ் மக்களின் படுகொலைக்குக் காரணமாக இருப்பதால் அவரை அமெரிக்காவுக்கு வர அனுமதிக்கக் கூடாது என நாடு கடந்த தமிழீழ அரசு அமெரிக்காவைக் கேட்டுள்ளது. (ந-5)

## வன்னிப்போர் 21-ம்...

21ஆம் நூற்றாண்டின் பாரிய இரகசிய படுகொலை போராக வன்னிப் போரை செய்தியாளர் அன்னி குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் அழுத்தத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்து வருகிறது. எனினும் சீனாவின் ஆதரவைக் கொண்டு பயங்கரவாதத்துக்கு எதிரான போரை வெற்றி கொண்டு விட்டதாக இலங்கை அரசாங்கம் தெரிவிக்கிறது.

ஆனால் மிகவும் மோசமான முறையில் மேற்கொள்ளப்பட்ட வன்முறையை ஏனைய நாடுகளுக்கு பாடங்களாக காட்டமுடியாது என்று சிட்னி மோனிங் ஹெறல்ட் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் இலங்கை பேச்சாளர் கோர்டன் வைஸ் அண்மையில் கூறிய கருத்தில் இலங்கையில் தமிழர்கள் மொழி உரிமை ஒடுக்கப்பட்டு, நிலம் பறிக்கப்பட்டமை காரணமாகவே தனித் தமிழீழத்தை கோரிவருவதாக குறிப்பிட்டிருந்தார். அதே வேளை வன்னியில் கோரமான போர் இடம் பெற்றுக்கொண்டிருக்கையில், அதனை தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை தவறியமையை விக்கிலீக்ஸும் தகவலை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் இலங்கையில் இன வேற்றுமை பாரியளவில் அதிகரித்து வருகிறது. அத்துடன் அடக்குமுறை ஆட்சியும் அங்கு வேகமாக நடந்தேறி வருகிறது என்று கோடன் வைஸ் குறிப்பிட்டுள்ளார். எனினும் அவுஸ்திரேலியா உட்பட்ட மேற்குலக நாடுகள் வெட்கக்கேடான நிலையில் இந்த செயல்களை கண்டுகொள்ளவில்லை என்று கோர்டன் வைஸ் விமர்சனம் செய்துள்ளமையை சிட்னி மோனிங் ஹெறல்ட் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-5)

## அமைச்சர் பீரிஸ் ஜெனி...

உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன ஆகியோரைக் கொண்ட உயர் நிலைக் குழுவை அமைத்திருந்தது.

அமெரிக்காவின் உதவி ராஜாங்கச் செயலர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டதால் வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஜெனிவா சென்ற கையோடு கொழும்பு திரும்பியிருந்தார். இதனால் ஏனைய 4 பேர் கொண்ட உயர் நிலைக் குழுவே ஜெனிவாக் கூட்டத் தொடரில் பங்கேற்றிருந்தது.

இந்த நிலையில் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அடங்கலான குழுவினர் நேற்று முன்தினம் காலையும், அமைச்சர் மகிந்த சமரசிங்க தனியாகவும் நாடு திரும்பியுள்ளனர்.

இந் நிலையிலேயே வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நேற்றுமுன்தினம் ஜெனிவா பயணமாகியுள்ளார்.

அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் அடுத்த வாரம் மீண்டும் ஜெனிவா செல்லவுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்படுவதை தடுத்துவிட்டதாக இலங்கை அரசாங்கம் கூறியுள்ளபோதும் ஜெனிவாவில் இன்னமும் கடுமையான நெருக்கடிகள் எதிர் நோக்கப்படுவதாகவும் அதனை சமாளிக்கவே அமைச்சர்களை மாறிமாறி அனுப்பிவருவதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## இனப்பிரச்சினையை...

தமது கருத்தை இவ்விரு அமைப்புக்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகள் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவை தெரிவிக்கவேண்டும் என்று குறித்த இரண்டு அமைப்புக்களும் கேட்டுள்ளன. பொது அமைப்புக்களும் இந்த விடயத்தில் முக்கிய கவனத்தை செலுத்த வேண்டும்.

இலங்கையின் இறுதிப்போரில் இடம் பெற்ற உயிரிழப்புகளை தடுக்க சர்வதேசம் அன்று தவறி விட்டது. எனினும் இன்றாவது அது தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று கண்காணிப் பகத்தின் ஆசிய பிரிவு உதவிப் பணிப்பாளர் எலின் கோரியுள்ளார்.

நிரந்தர சமாதானத்தின் போது இந்த குற்றங்கள் கணக்கெடுக்கப்படாவிட்டால் இது எதிர்கால முறைகேடுகளுக்கு வழிவகுக்கும். ஆப்கானிஸ்தான் மற்றும் கொங்கோ ஆகிய நாடுகள் இதற்கு உதாரணங்களாகும். இலங்கையில் உள்நாட்டு போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படாவிட்டால்- தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினை கள் தொடர்பில் தீர்வுகள் முன்னெடுக்கப்படாவிட்டால் அது இலங்கையின் குறுகிய வாழ்வு ஒன்றுக்கு வழியேற்படுத்திவிடும் என்றும் ஐபிஎஸ் இணையதளத்துக்கு அவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் இடம்பெற்ற குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை இனங்காணாமை காரணமாகவே இன்றும் யாழ்ப்பாணத்தில் காணாமல்போதல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இலங்கையில் எதிர்க்கட்சிகள் நீதிமன்றங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அனைத்தும் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஊடக தொடர்பு பணிப்பாளர் சாறொன் சிங் தமது கருத்தில் இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு மனித உரிமைகள் தொடர்பிலான உண்மை விசாரணைகளில் நீதி வழங்குவதிலிருந்து தோல்வி கண்டுள்ளதாக குறிப்பிட்டார். (ந-5)

# தொடர் முழுமையாக இங்கிலாந்து வசம்

இங்கிலாந்து அணி 5ஆவது ஒருநாள் போட்டியிலும் டக் வேத் லூயிஸ் முறையில் 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரை 3:0 என முழுமையாக கைப்பற்றியது.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் சென்ற இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. இதில் இங்கிலாந்து அணி 2:0 என ஏற்கெனவே தொடரை தனதாக்கியது. முக்கியத்துவம் இல்லாத ஐந்தாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் கார்டிப்பில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து களத்தடுப்பை தேர்வு செய்தது.

மழை காரணமாக போட்டி 40 நிமிடங்கள் தடைப்பட்டது. தொடர்ந்து ஆடிய இந்திய அணி 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 304 ஓட்டங்களைக் குவித்தது.

மழையால் மீண்டும் ஆட்டம் பாதிக்கப்பட இங்கிலாந்துக்கு டக் வேர்த் லூயிஸ் முறைப்படி 40 ஓவரில் 270 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என வெற்றி இலக்கு மாற்றப்பட்டது. மீண்டும் மழையால் இங்கிலாந்துக்கு 34 ஓவரில் 241 ஓட்டங்கள் என புதிய வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இங்கிலாந்து அணி 32.2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

## அரசு-கூட்டமைப்பு...

நிகழ்ச்சி நிரல் குறித்துக் கருத்து வெளியிடவும் மறுத்துள்ளார்.

அதேவேளை நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்கள் தொடர்பாக இருதரப்பும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் ஒப்பமிட்டு இந்தக் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கூட்டறிக்கையில், செப்ரெம்பர் 2 -ம் நாள் ஜனாதிபதிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பை அடுத்தே நேற்று முன்தினம் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

விரைவான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக கடந்த மார்ச் 18-ம் நாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கலந்துரையாடல் ஆவணம் மற்றும் அதற்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டங்கள், அறிக்கைகளின் அடிப்படையில் பேச்சுக்களை மீளத் தொடங்க முடியும் என்று இந்தச் சந்திப்பில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே மீளவும் பேச்சுக்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றைய பேச்சுக்களில் இலங்கை அரசின் சார்பில் அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, ஜி.எல்.பீரிஸ் மற்றும் பேராசிரியர் ரஜீவ விஜசிங்க, சஜின்வாஸ் குணவர்த்தன ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன் எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சட்டவாளர் கனகஈஸ்வரன் ஆகியோரும் பங்கேற்றனர்.

அடுத்த சுற்றுப்பேச்சு ஒக்ரோபர் 3-ம் திகதி நடத்தவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

பேச்சுக்களின் போது, முன்னதாக வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டங்கள் குறித்து, குறிப்பாக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு, சந்திரிகா குமாரதுங்கவின் தீர்வுப் பொதியும் கூட கலந்துரையாடப்படவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ந-5)

## இலங்கை அரசைக்...

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

அங்கு மேலும் அவர்கள் தெரிவிக்கையில், இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பாக ஜெனிவாக் கூட்டத்தொடரில் பேசப்பட்டு வரும் நிலையில் அரசுடன் தடைப்பட்டிருந்த பேச்சுவார்த்தையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது அரசாங்கத்தை போர்க் குற்றச்சாட்டிலிருந்து காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் முயற்சி என்றே கூறமுடியும். அரசுடன் கூட்டமைப்பு இறுதியாக பேச்சுவார்த்தை நடத்தியபோது அதிகாரப் பகிர்வு பற்றி பேசவில்லை.

13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கம் பற்றியே பேசியுள்ளது. எதுஎவ்வாறாயினும் அரசைக் காப்பாற்றும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபடுவது வரலாற்றுத் துரோகம் ஆகும் என்றும் அவர்கள் குற்றம் சாட்டினர். (ந-6)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சண்முகராசா விமலாதேவி



புதுத்தோட்டம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் தற்போது Dr. நடராசா வீதி, கந்தரோடை றோட், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராசா விமலாதேவி அவர்கள் 17.09.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு. சண்முகராசா (ஓய்வூதியர், புகையிரத திணைக்களம்) அவர்களின் மனைவியும் காலம் சென்றவர்களான திரு. திருமதி நாகமணி தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான திரு.திருமதி கணபதிப்பிள்ளை பூரணம் (சங்கானை) அவர்களின் அன்பு மருமகளும் காலம்சென்ற சிவஞானம், காலம்சென்ற அன்மலர், யோகமலர் (பிரான்ஸ்), சிவபாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதாகரன் (பிரான்ஸ்), சசிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் நதிமலர் (பிரான்ஸ்), விஜயா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கனிஸ்ராவின் (பிரான்ஸ்) அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19.09.2011 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொந்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்முகராசா (குணம் மாமா)

(C-4478)

## கைலாயக்கம்பர் நடேசன்

### (தவில் வித்துவான் - காரைநகர்)

கைலாயக்கம்பர் - மின்னம்மாவின் புதல்வரும் ஐயாச்சாமி (இந்தியா) காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் கணேசன், தவில் வித்துவான் வீராச்சாமி, நாகேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நகுலேஸ்வர், சௌந்தராம்பிகை, அம்பிகைபாகன் காலஞ்சென்ற கோகிலறமணன் ஆகியோரின அன்புத் தந்தையும், சண்முகதாஸ் (நாதஸ்வரம்) உதயகுமார் (தவில்) கௌரீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள தற்காலிக முகவரியான உயரப்புலம் பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் பிற்பகல் 1 மணிக்கு தகனம் செய்யப்படும்.

(C-4479)

தகவல்: மகன்: அம்பிகைபாகன்

இளையோர் கல்வி-தொழில் வழிகாட்டி இதழான
சகரம் இளையோர் மாதாந்தம் தொடு ஏற்பாட்டில்

## யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக

## UK, Australia, Canada New Zealand, USA

பல்கலைக்கழக பட்டப்படிப்புக்களை வழங்கும்

**10க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் உங்களிடம் நேரில் வருகின்றன**

# MALAYSIAN EDUCATION FAIR & SPOT ADMISSION




போர்க்காலச் சூழலில் பல்வேறு காரணங்களால் உயர்கல்விவாய்ப்பைத் தவறவிட்ட வன்னி மாணவர்கள், பொருத்தமான தொழிற்பயிற்சி அல்லது பட்டக்கல்வியைத் தொடர்வதற்கு முன்னுரிமை

புலமைப்பரிசில்கள் மற்றும் இலவச ஆங்கில வகுப்புக்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுடன் நேரில் வந்து பல்கலைக்கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்து ஒளிமயமான எதிர்காலத்துக்கு உத்தரவாதமான வழிமுறையைத் தெரிவுசெய்யுங்கள்!

**அனுமதி இலவசம்! அனுமதி இலவசம்! அனுமதி இலவசம்!**

**Nottingham UK, Monash Australia, INTI (USA & Canada)**
மலேசிய கிளைகள் உட்பட 10 பல்கலைக்கழகப் பிரதிநிதிகளை நீங்களே நேரில் சந்தித்து அனுமதி பெறும் வாய்ப்பு!
(மொழிபெயர்ப்பு வசதிகள் உண்டு)

**செப். 20**
செவ்வாய்க்கிழமை
மு.ப.10.00 பி.ப.5.00
**ஞானம்ஸ் ஹொட்டேல்**
மணிக்கூட்டுக் கோபுர வீதி
(யாழ் வைத்தியசாலை பின்பக்கம் - பஸ் நிலையத்திலிருந்து 100 m)

கண்காட்சி ஏற்பாடு:
கல்வி வழிகாட்டல் பிரிவு
சிகரம் ஊடக இல்லம்
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
In Association with Winning Magnitude Gateway to Malaysia Education
ஊடக அனுசரணை
சகரம் Day Jaffna Today
Supported and Endorsed by:
Ministry of Higher Education Malaysia
High Commission of Malaysia

உல்லாசம் உங்கள் கண்முன்னே...

## TILKO JAFFNA CITY HOTEL



TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849

கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
aramex delivery unlimited
யாழ்ப்பாணம்
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

## இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
**நியூ லலிதாஸ் ஜுவல்லறி** ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134
(சி-4418)

**After A/L?** Government Schol.

**CIMA-UK** Per Level Rs.14,400
Batch I : Sat 7.30-2PM
Batch II : Sun 2-5.30PM
Batch III : Mon- Fri 9 AM- 2 PM

**Engineering-USA** 80% off
Batch I : Sat & Sun 10 - 12PM
Batch II : Sat & Sun 4 - 6PM
Batch III : Mon- Fri 8 AM -10 AM

**BIT** University of Colombo-ucsc
Per year Rs.20,000 (Sem 1 & 2)
Batch I : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch III : Mon- Fri 4.30-5.30 PM

**Multimedia_USA**

**FIT** University of Colombo-ucsc Rs.17,000 off

இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
Free Course fee : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்

**MCS** Supported By UNDP/JRRP
இலங்கை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
Diploma Courses.. Free Course fee* *MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English
324, Palaly Road, Campus Junction,Jaffna. www.mcsitcampus.org
கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் மற்றைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

## Study in Jaffna ! Save your money!

இணையத்தளப்பதிவு,இணையத்தள வடிவமைப்பு, மென்பொருள் வடிவமைப்பு,கணினி வலைப்பின்னல் சேவைகளினை வழங்குவதில் பல வருட அபிமானம் பெற்ற SPEED IT NET நிறுவனத்தில் உயர் தர கணினி வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
வேலைவாய்ப்பினை உறுதிசெய்யும் உயர் தர கற்கைநெறிகளான

- BIT (Colombo University) Degree(Semester 1-6)
- Advanced Diploma in Web Development (HTML/PHP/MySQL/JavaScript/CSS/Ajax/Open Source Applications)
- Diploma in Windows Networking / Hardware Engineering
- Diploma in Computer Programming (Java or C# or VB.net or VB6 or C++)

மேற்படி கற்கைநெறிகளில் ஒன்றை பயிலும் மாணவர்களுக்கு
பின்வரும் பயிற்சிப்பட்டறை வகுப்புக்களில் இலவசமாக கலந்துகொள்ளும் வாய்ப்பு
# English # Tamil Computing # Pc & Internet Applications # e-Commerce
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டும்! முன்கூட்டிய பதிவுகள் அவசியம்!
வகுப்புக்கள் அனைத்தும் **ஒக்டோபர் 1** ம் திகதி முதல்

**SPEED IT NET** The Quick way to Online URL: www.speedit.lk
72/28 Panikkar Lane, off Palaly Road,Thirunelvely Junction Jaffna
# Tel: 021 222 8358 0777 563 213 021 567 1058

## பாடசாலை, பல்கலைக் கழகம் முடித்துவிட்டு வேலை தேடி களைத்து விட்டீர்களா?

Nation Popular Travels & tours இன்
2நாள் பயிற்சிப்பட்டறை
திகதி- Sep 24,25

Tourism, Airticketing Media & Tourism Personality Development போன்ற துறைகளில்.

வழங்குவோர்
சுற்றுலாத்துறை விரிவுரையாளர்கள்....
பிரபல வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள்....
ஊடகவியலாளர்கள்......
விமான சேவை அதிகாரிகள்....
சான்றிதழ் வழங்கப்படும்
அனுமதிக்கு முந்துங்கள்
SMS ஊடாக இப்பொழுதே உங்களது விபரங்களை அனுப்புங்கள் Tel - 077 217 59 69

HRM Nation Popular Travels & Tours
No: 82,Brown Road jaffna
Hot Line: 0214920920

உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி இத்துறைகளில் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்காக உங்களை தயார் செய்யுங்கள்.

வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர் கந்தனை வேண்டுகின்றோம்
இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னனியான நிறுவனம்

## World Express Services

உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்
கிளை: 227, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2220356
(இந்திய தூதரகத்திற்கு அருகாமை)

தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு -15
தொ.பே: 0112520894

கிளை: 180/5 புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம்,வவுனியா
தொ.பே: 024 490 3200

E.Mail: Worldexpress.ser@gmail.com www.worldexpressservices.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.